பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 08, வியாழக்கிழமை 24.08.2017 கதிர் 291

# அமைச்சர் வாரியம் நேற்றுப் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஓக.24
வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சரவை நேற்றுப் பொறுப்பேற்றது. ஐந்துபேர் கொண்ட அமைச்சர் வாரியத்தில் ஏற்கனவே கல்வி அமைச்சராக இருக்கும் சர்வேஸ்வரனின் பொறுப்பில் எந்த பக்கம் 18











## ரெலோ செயலாளர் நாயகம் திட்டவட்டம்:

# குணசீலனுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை!

அளப்பு அருணாசலம்



அரசியலிலை 'காலி' களுக்குத்தான் இடம் பாருங்கோ...!

## அரசியல் கட்டாக்காலிகளுக்கு கட்சியில் இடமில்லையாம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24
கட்சியின் முடிவை மீறி அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்ற ரெலோவின் மாகாணசபை உறுப்பினர் குணசீலனுக்கு எதிராக கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை நிச்சயமாக - உறுதியாக - முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் ரெலோவின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா.

தங்கத்துரை, குட்டிமணி போன்ற தியாகிகளினால் வளர்த்தெடுக்கப்பட்ட ரெலோவில், அரசியல் கட்டாக்காலிகளுக்கு நிச்சயமாக இடமில்லை என்றும் அவர் கூறினார். பக்கம் 18

## மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் விசாரணையில்!

கொழும்பு, ஓக.24
முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டார். அவர் மத்திய வங்கி ஆளுநராக இருந்தபோது இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் சுமார் ஏழு மணி நேரம் அவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது. (உ)

## கட்சியின் தீர்மானத்துக்காக அமைச்சரை நியமிக்க முடியாது!

### ரெலோ ஸ்ரீகாந்தாவுக்கு முதலமைச்சர் பதிலடி

யாழ்ப்பாணம், ஓக. 24
கட்சி தீர்மானித்துப் பரிந்துரைத்தது என்பதற்காக ஒருவரை அமைச்சராக நியமிக்க முடியாது எனத் திட்டவட்டமாகப் பதிலளித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

ரெலோவைச் சேர்ந்த விந்தனுக்குப் பதிலாக குணசீலனை அமைச்சராக நியமிப்பதற்கு முதல்வர் விக்னேஸ்வரன் எடுத்த முடிவை ஏற்க ரெலோ மறுத்துள்ளமை தெரிந்ததே.

இது தொடர்பில் ரெலோ செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா பக்கம் 18

## கைதிகளின் அவலம் தொடர்வதற்கு தமிழ்க் கூட்டமைப்பே காரணமாகும்

### முன்னாள் எம்.பி. கஜேந்திரன் சாடல்



யாழ்ப்பாணம், ஓக.24
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நிபந்தனையுடன் ஆதரவளிக்க வேண்டும் என்றும், அந்த நிபந்தனையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் நாம் அப்போது பல தடவைகள் கூறினோம். ஆனால், கூட்டமைப்பு பக்கம் 18

## அரசமைப்பின் 20ஆவது திருத்தம்: சட்டமூலம் நேற்றுச் சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஓக.24
மாகாணசபைத் தேர்தல் முறைமைகளை மாற்றுவது தொடர்பாக தற்போதைய அரசமைப்புக்குச் செய்யப்படவுள்ள 20 ஆவது திருத்துக்கான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் பிரதான இணைப்பாளர் அமைச்சர் பக்கம் 18

## யாழ்.பல்கலை. விஞ்ஞானபீடம் டெங்கு அச்சத்தால் மூடப்பட்டது

### மாணவன் பலி; 9 பேர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஓக24
யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒருவர் டெங்கு நோயால் மரணமடைந்தும், மேலும் 9 மாணவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் பக்கம் 18

## சட்ட நடவடிக்கைக்கு தயாராகிறார் டெனீஸ்



மன்னார், ஓக.24
மாகாண அமைச்சர் பதவியிலிருந்து தம்மை முதல்வர் விக்னேஸ்வரன் வெளியேற்றியமை தவறு, சட்டவிரோத நடவடிக்கை எனத் தெரிவித்துள்ள பா. டெனீஸ்வரன், பக்கம் 18

## சமுர்த்தித் திட்டம் வடக்குக் கிழக்கில் வெற்றிபெறவில்லை

### ஜனாதிபதியின் கவலை இது



கொழும்பு, ஓக.24
நீண்டகால போர் காரணமாக அபிவிருத்தியில் பின்னடைந்துள்ள வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த உள்ளது என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பக்கம் 18

## பொலித்தீன் பாவனைத் தடை அடுத்த முதலாம் திகதி முதல்!

### ஆனால் 2018 இலிருந்துதான் இறுக்கிப் பிடிப்பார்களாம்



கொழும்பு, ஓக. 24
நாட்டில் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்யும் வகையில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இருப்பினும் 2018 ஜனவரி முதலாம் திகதி பக்கம் 18


## அமைச்சுப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார் விஜேதாஸ

கொழும்பு, ஓக. 24
முன்னாள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தனக்கு வழங்கப்பட்டிருந்த வாகனத்தை அமைச்சில் ஒப்படைத்து அமைச்சிலிருந்து வெளியேறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 18

# பலமான நாடுகளின் போர்க்களமாக இலங்கையை மாற்ற அரசு முயற்சி!

## மஹிந்தவின் விசுவாசியான குணதாஸ அமரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 24
நாட்டின் பொது வளங்களை சர்வதேசத்துக்கு தாரைவார்த்துக்கொடுத்து உலகின் பலமிக்க நாடுகளின் போர்க் களமாக இலங்கையை மாற்றுவதற்கே நல்லாட்சி அரசு முனைகிறது என தேசிய அமைப்புகளின் சம்மேளனத் தலைவரும் மஹிந்தவின் விசுவாசியுமான குணதாஸ அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில்கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


நல்லாட்சி என்று பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு விதைத்த தற்போதைய அரசு நாட்டின் பொது வளங்களையும், அரச சொத்துகளையும் சர்வதேசத்தின் பலமிக்க நாடுகளுக்குத் தாரை வார்த்து வருகின்றது.

முன்னாள் அரசின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அம்பாந்தோட்டை துறைமுகம் எமது நாட்டின் மிகச் சிறந்த சொத்தாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைசீனாவுக்கு விற்பனை செய்துள்ள தற்போதைய நல்லாட்சி அரசு மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்குக் கூறுபோட நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அமெரிக்காவும் இலங்கை மீது கழுகுப் பார்வை செலுத்தி வரும் சூழலில் அரசு மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி சர்வதேசத்தில் பலமிக்க நாடுகளுக்கு இலங்கையின் சொத்துகளை விற்பனை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை அந்நாடுகளின் யுத்த களமாக மாறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காணிகளை மீட்டுத் தருவதற்கு உறுதி கூறினார் சந்திரிகா!



கொழும்பு, ஓக. 24
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில்இருக்கும் நிலங்களை மீட்டுத் தருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க உறுதி மொழி வழங்கியுள்ளார்.

கேப்பாபிலவில் மக்களின் குழுவிற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கும்இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தவிசாளர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளு மன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரின் செயலாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நீண்ட நாள்களாக போராடி வரும் மக்களுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பது குறித்து உறுதி மொழி வழங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இப் பிரச்சினை குறித்து தொலை பேசி வாயிலாக இராணுவத் தளபதியுடனும் கலந்துரையாடியுள்ளார்.

## தலைமைப் பதவியிலிருந்து விலகவில்லை என்னை எவரும் விலக்கவும் இல்லை!

### சுதந்திரக் கட்சியின் தலைவர் நானே!!



மஹிந்த ஆவேசம்

கொழும்பு, ஓக. 24
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நான் விலகவுமில்லை,என்னை யாரும்விலக்கவுமில்லை. ஆகவே தற்போதும் அக் கட்சியின் தலைவராக தான் திகழ்கிறார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு பத்தரமுல்லையிலுள்ள அக்கட்சியின்அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசு தொடர்ந்துகடன்சுமையை பேசி பூச்சாண்டி காண்பித்து வருகிறது. அதுவும் எமது ஆட்சிக்காலத்தில் பெறப்பட்ட கடனையே பேசிக்கொண்டிருக்கிறது.

எனினும், எமது ஆட்சியில் சகல துறைகளிலும் அபிவிருத்தியையே முன்னெடுத்தோம். அந்த அபிவிருத்திகளை சகல இடங்களிலும் காணமுடியும்.

மேலும்அரசுதற்போது வருமானவரி சட்டமூலம் கொண்டுவருவதற்கு நடவடிக்கைஎடுத்துள்ளது.

எனினும் மக்களுக்கான சகல சலுகைகளையும் துண்டித்துள்ளது. இதற்கு முன்னர் செல்வந்தர்களிடமிருந்து மாத்திரம் வருமானவரி பெறப்பட்டது. இனி சகல தரப்பினரிடமிருந்தும் வரி பெறுவதற்கு அரசு முயற்சிக்கிறது.

மலர்களிலிருந்துதேன் பெறுவதுபோல் மக்களிடமிருந்து வரி அறவிடும் கொள்கையிலேயே நாம் செயற்பட்டோம். எனினும்அம்மலர்களைகசக்கி பிழிந்து தேன் பெறுவது போல் நல்லாட்சி அரசாங்கம் மக்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு எதிர் பார்க்கிறது. இது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாகும்.


மேலும் மக்கள் மத்தியில் எம்மைப் பற்றிய வைராக் கியத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கிறது. அதற்குப் பல்வேறு குற்றச் சாட்டுகளை முன்வைக்கின்றது. எனவே எம் மீதான அவமதிப்பு தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

மேலும், தற்போது ஊடக சுதந்திரம் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். எனினும் ஊடகங்கள் மீதான கெடு பிடிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதேபோல் ஏனைய துறைகளிலும் நெருக்கடிகள் உள்ளன.

எனவே, நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். அந்த மாற்றத்தை நாம் ஏற்படுத்துவோம். அதன் பின்னர் ஏற்கனவே நாம் வழங்கிய சலுகைகளை மக்களுக்கு மீண்டும் வழங்குவோம்.

மேலும், எமக்கெதிராக அரசு முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சாட்சிகள் இல்லை. சாட்சிகள் இருக்குமாயின் அரசிலுள்ளவர்கள் எமக்கெதிராக நடவடிக்கை எடுக்காது விடமாட்டார்கள். நாம் குற்றம் இழைக்கவும் இல்லை. அதனால் சாட்சியும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சருக்குக் கடிதம்!



கிளிநொச்சி, ஓக. 24
200 வரையான குடும் பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்ட போது வராத சட்டம் 16 குடும்பங்களுக்கான வீடுகளை அமைக்கும் போது எவ்வாறு வந்தது என பெரியபரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பெரியபரந்தன் கிராமத்தில் தெரிவு செய்யப் பட்ட 16 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டம் நிறுத்தப்பட் டமை தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கு பெரியபரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் அடிப்பியுள்ளது.

அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த காலத்தில் எமது கிராமத்தில் இதே வயல் நிலங்களில் வாழ்ந்த சுமார் 200 வரையான குடும்பங்க ளுக்கு அரசின் வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெற்று வீடுகளையும் முழுமையாக அமைத்து முடித்துள்ளனர்.

எனவே, இதன்போது நடைமுறைக்கு வராத சட்டம் இந்த 16 குடும்பங்களுக்கு மாத்திரம் எவ்வாறு வந்தது?

இதேபோன்று வேறு கிராமங்களிலும் இவ்வாறான நிலங்களில் வாழ்கின்ற மக்கள் தற்போது வீட்டுதிட்டங்களைப்பெற்று வீடுகளை அமைத்து வருகின்றனர்.

மீள்குடியேற்ற மக்களின் நலன்களிலும் அவர்களின் வீட்டுத்திட்ட விடயத்திலும் மிகவும் கரிசனையோடு செயற்பட்டு வரும் தாங்கள் எமது கிராம மக்களின் மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்திட்டத்தைத் தாமதிக்காது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடிதத்தின் பிரதி மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சுவிஸ் மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய ஓட்டோ சாரதியின் பிணை மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஓக. 24
சுவிஸ் மாணவியொருவரை வல்லுறவுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஓட்டோ சாரதியின் பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அநுராதபுரம் பிரதேசத்தின் தொன்மைச் சிறப்புகள் குறித்த ஆய்வொன்றுக்காக சுவிஸ் மாணவிகள் குழுவொன்று இலங்கை வந்திருந்தது.

அவர்களில் ஒரு மாணவி கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி அநுராதபுரத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரையொன்றுக்குச் சென்றிருந்த நேரத்தில் ஓட்டோ சாரதியொருவரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

இந்த ஓட்டோ சாரதி சுவிஸ் மாணவியை இரண்டு நாள்கள் வரை பலவந்தமாக தடுத்து வைத்து வல்லுறவுக் குட்படுத்திய பின் நகரத்தில் கொண்டு வந்து, இறக்கி விட்டுச் சென்றிருந்தார்.

எனினும், பொலிஸார் கண்காணிப்புக் கமெராக்களின் உதவியுடன் ஓட்டோ சாரதியைக் கண்டுபிடித்துக் கைது செய்திருந்தனர்.

தற்போதைக்கு வல்லுறவுக் குட்படுத்தப்பட்ட மாணவி சுவிஸ் திரும்பிச் சென்று மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஓட்டோச் சாரதி தனக்கு பிணை வழங்குமாறு கோரி முன்வைத்த மனுவை அநுராதபுரம் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

மேலும், சந்தேக நபரின் மரபணு மாதிரியை கொழும்பு பொரளையில் அமைந்துள்ள ஜீன்டெக் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 20ஆம் திகதி பதவி நீக்கிய டெனீஸையும் சேர்த்து 23இல் அமைச்சரவைக் கூட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 24

கடற்றொழில், போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை உடனடியாக அந்த அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்ற முடிவு செய்திருக்கின்றார் என்று கடந்த 20 ஆம் திகதி அவருக்கு ஒப்பமிட்டுக் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கிய முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அதற்குப் பின்னர் இரண்டு நாள்கள் கழித்து நேற்று முன்தினம் அதே டெனீஸ்வரனை அதே அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சராகஏற்றுக் கொண்டு, அவரையும் சேர்த்து வைத்து, அமைச்சர் வாரியக் கூட்டத்தை நடத்தியிருக்கின்றார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக கடந்த 20 ஆம் திகதி டெனீஸ்வரனுக்கு முதல்வர் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

கௌரவ பி.டெனீஸ்வரன்,

மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தகமும் வாணிபமும், கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து ஆகிய வற்றுக்கான அமைச்சுப் பொறுப்பிலிருந்து உங்களை உடனடியாக விலக்க நான் முடிவு செய்துள்ளேன். இது தொடர்பாக உங்கள் உத்தியோகபூர்வ ஆவணங்களை உங்கள் செயலாளரிடம் ஒப்படையுங்கள். இது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் தொடர்ந்து பின்னால் வரும் நன்றி." – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பொறுப்பிலிருந்து உடனடியாக விலக்குகிறார் என இப்படி ஒரு கடிதத்தை டெனீஸ்வரனுக்கு அனுப்பி விட்டுத்தான், இரண்டு நாள் கழித்து அவரையும் அமைச்சராக சேர்த்து வைத்துக் கொண்டு அமைச்சர் வாரியக் கூட்டத்தை நடத்தியிருக்கின்றார் முதலமைச்சர்.

கடந்த அமைச்சர் வாரியக் கூட்டம்சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அந்தக் கூட்டம் முழுமையாக முடிவடையும் வரை அதில் டெனீஸ்வரன் அமைச்சர் என்ற முறையில் பங்குபற்றினார்.

அதனை முதல்வர் கடுகளவேனும் ஆட்சேபிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
Justice C.V.Wigneswaran
முதலமைச்சர் - வட மாகாணம்
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත
Chief Minister – Northern Province

தொலைபேசி / Telephone: 021 320 2465
தொலைநகல் / Fax: 021 221 7227

A-9 வீதி, கைதடி
A-9 Road, Kaithady

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு

මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සංචාරක, පළාත් පාලන, පළාත් පරිපාලන, කෘෂිකර්ම හා ගොවිජන සේවා, සත්ව පාලන, වාරිමාර්ග, ජල සම්පාදන සහ පරිසර අමාත්‍යාංශය

Ministry of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Tourism. Local Government, Provincial Administration, Agriculture & Agrarian Service, Animal Husbandry, Irrigation, Water Supply and Environment

My Ref. NP/CM/01/Fisheries Min/2017
Date 20.08.2017

Hon' B.Deniswaran!

This is to inform you that I have decided to remove you from the post of Minister of Fisheries, Transport, Trade and Commerce, Rural Development, Road Development and Motor Traffic forthwith. Please hand over all official documents in this regard to your Secretary. The official letter in this regard will follow. Thank you.

Thanks.

Sincerely

Justice C.V.Wigneswaran
Chief Minister
Northern Province.

(டெனீஸ்வரனுக்கு முதல்வர் அனுப்பி கடிதம்)

## இணைய பாவனையாளர்களுக்கு இனிப்பான செய்தி

அனைத்துவகையான இணையப் பாவனையாளர்களுக்கும் இணைய சேவைக்காக மேலதிகமாக பத்துவீத இன்டர்நெட் பக்கேஜ்கள் (Data) வழங்கப்படவுள்ளதாக தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் அனுமதிபெற்ற தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்கள் ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இன்டர்நெட் பக்கேஜ்கள்/ அட்டைகளுக்கான தொலைத் தொடர்புகளுக்கான வரி குறைக்கப்பட்டமையினால் அனைத்து மொபைல் மற்றும் fixed line வாடிக்கையாளர்களுக்கு பத்து வீத போனஸ் Data வினை அனைத்து தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களும் நல்லெண்ணத்துடன் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

2017 ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி அன்று நடைபெற்ற கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் இன்டர்நெட் பக்கேஜ்களுக்கான தொலைத் தொடர்பு வரி அகற்றப்பட்டமையானது டிஜிட்டல் ஸ்ரீலங்காவை உருவாக்குவதற்கான ஒரு பாரிய முன்னோக்கிய நகர்வாக அமையும் என தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களால் ஒன்றிணைந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புகளுக்கான வரிநீக்கப்பட்டமையுடன் போனஸ் சலுகையானது இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் அனுமதியினை பெற்றுள்ளதுடன் 2017 செப்டெம்பர் மாதம் 01ஆம் திகதி முதல் அது அமுல்படுத்தப்படும். – எனக் கூறப்பட்டுள்ளது. (ம)

## மண் அகழும் பிரதேசங்கள் ஹெலி மூலம் நோட்டமாம்!

யாழ். குடாநாட்டில் சட்டவிரோதமாக மண் அகழும் இடங்கள் எனக் கருதப்படும் பிரதேசங்களில் விமானப்படையினர் ஹெலிக் கொப்டர்கள் மூலம் கண்காணிப்பில் ஈடுபட்டமையுடன், அப்பிரதேசங்களைப் படமும்எடுத்துக்கொண்டனர் என விமானப்படை தெரிவித்துள்ளது.

நேற்று யாழ். குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, அரியாலை, பாசையூர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்கள் ஹெலிக் கொப்டரில்கண்காணிக்கப்பட்டன.

நாட்டின் காடுகள் மற்றும் கனியவளப்பிரதேசங்களைப்பாதுகாக்கும் நோக்கில் மாதம் ஒரு முறை விமானப் படையினர் இந்தப் பிரதேசங்களை விமானத்தின் மூலம் பார்வையிட்டு ஒளிப்படங்கள் எடுத்து வருகின்றனர் என விமானப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## மின்குமிழை வாங்கிக் கொடுத்தபோதும் பொருத்துவதற்கு அதிகாரிகள் அசமந்தம்

### வலி.மேற்கு பிரதேச சபை, மின்சார சபை மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 24

சித்தன்கேணி டச்சு வீதியில், சிவன் கோயிலுக்கு சமீபமாக முச்சந்தியில் உள்ள வீதி விளக்கு பழுதடைந்த நிலையில், அதை மாற்றுவதற்கு வலி.மேற்கு பிரதேச சபையும் மின்சார சபையும் பின்னடிக்கின்றமை தொடர்பாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படிச் சந்தியில் பொருத்தப்பட்ட மின்குமிழ் பழுதடைந்தநிலையில், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அப்பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் தனது சொந்தச் செலவில் புதிய மின்குமிழ் ஒன்றை வாங்கியமையுடன் அதைப் பொருத்துவதற்கு வலி.மேற்கு பிரதேச சபையின் உதவியை நாடினார்.

ஆனால், அவர்கள் வட்டுக் கோட்டை மின்சார சபை அலுவலகத்திற்குச் செல்லுமாறு அவருக்குக் கூறினர். ஆனால் மின்சார சபையும் அவரது கோரிக்கையை ஏற்று மின்குமிழைப் பொருத்தவில்லை. இவ்வாறு கடந்த ஒன்றரை மாதமாக அவர்கள் இதனை இழுத்தடித்து வருகின்றனர் என அந்தக் குடும்பஸ்தர் கவலை வெளியிட்டார்.

இதேவேளை, மூளாய் கிராம அபிவிருத்திச் சங்கமும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இதேபோன்ற ஒரு குற்றச்சாட்டை பிரதேச சபை மற்றும் மின்சார சபைக்கு எதிராக முன்வைத்திருந்தது.

வீதி விளக்குகள் பழுதடையும் போது பொதுமக்கள் மின்குமிழ்களைக் கொள்வனவு செய்து கொடுத்தாலும் அதைப் பொருத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## இலஞ்சம் வாங்கிய உத்தியோகத்தர்கள் இருவருக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

வவுனியா, ஓக.24

வவுனியாவில் இலஞ்சம்பெற்ற போது பிடிக்கப்பட்டனர் எனக் கூறப்படும் வனவளப் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவர் நேற்று வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றும் இரு சிங்கள உத்தியோகத்தர்கள் நேற்று மதியம் 11.00 மணியளவில் அலுவலகத்தில் வைத்து லஞ்சம் வாங்கியபோதே லஞ்சஒழிப்பு ஆணைக்குழு உத்தியோகத்தர்களினால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களினால் வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமையவே தாங்கள் இந்தத் திடீர் சோதனையை மேற்கொண்டு அவர்களைக் கைது செய்தனர் என லஞ்சஊழல் ஒழிப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (ம-100)

## சிம் அட்டைகளைப் பெறுவதற்கான நடைமுறைகள் இனி இறுக்கமாகும்

### பொதுமக்களின் பாதிப்பைத் தடுப்பதற்கு

கையடக்கத் தொலைபேசிகளுக்கான சிம் அட்டைகளைப் பெறுவதற்கான நடைமுறை இனி இறுக்கமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

சிம் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளும்போது அதன் உரிமையாளரின் சரியான தகவல்கள் வழங்கப்படாத அதிகளவான இலக்கங்கள் காணப்படுகின்றன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும், அடையாளத்தை உறுதிசெய்யக் கூடிய தகவல்களுடன் சிம் அட்டைகளைப் பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறு குற்றங்கள் மற்றும் மோசடிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய உரிய முறையில் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பம் மற்றும் சிம் அட்டையை பயன்படுத்தும் நபரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி உட்பட அவசியமான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்களைப் பணித்துள்ளது. (ம)

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளருக்கு இடமாற்றம்

### தேசிய நல்லிணக்க அமைச்சின் மேலதிக செயலாளராக

யாழ்ப்பாணம், ஓக.24

வடக்குமாகாணகல்விஅமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் தேசிய நல்லிணக்க அமைச்சின் மேலதிக செயலாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நல்லிணக்க அமைச்சின் செயலாளராக சிவஞானசோதி பணியாற்றிவரும் நிலையில், பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் இவருக்கு மேலதிக செயலாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இரவீந்திரன், வக்குமாகாணத்தில் நீண்டகாலமாக சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சுக்களின் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

வேறு மாவட்டங்களுக்கு மாற்றம்பெற்றிருக்காது தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் அவர் 20 வருடங்கள் பணியாற்றியதன் அடிப்படையிலேயே தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

தமக்கு இடமாற்றக் கடிதம் கிடைத்ததை உறுதிப்படுத்திய இரவீந்திரன், தமக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்குமாறு கோரி விண்ணப்பித்திருக்கிறார். (ம)

## சமுர்த்தி...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறச் செய்வதற்காக துறையிலுள்ள அனைவரினதும் அறிவு, அனுபவம் மற்றும் பங்களிப்பை எதிர்பார்க்கிறேன்.

ஒன்பது மாகாணங்களிலும் பல்வேறு அரசமைப்பு நிலைமைகள் இருந்த போதிலும் மதிப்பு மிக்க நாடு என்ற வகையில் முழு நாட்டையும் ஒரே மாதிரியாகக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் கொள்கையாகும்.

உள்நாட்டு பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது சமுர்த்தி திட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறிய கருத்திட்டங்களை பிரதேச கருத்திட்டங்களாக மாற்றி, தேசிய மட்டத்துக்கு கொண்டுவந்து, வெளிநாட்டு சந்தை வரை கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறோம். – எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலையக மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கா, அமைச்சின் செயலாளர் ஷிரானி வீரக்கோன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நீல்பண்டார ஹப்புகின்ன, சமுர்த்தி சமூக மட்ட வங்கி மகாசங்க தலைவி ஆர்.ஏ.சித்ராணி ரணதுங்க மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சத்திய ஆவேசம் தேவையே

சில விடயங்களைச் செய்வதற்கு கோபம் - சீற்றம் - அல்லது சத்திய ஆவேசம் - கூடத் தேவைப்படவே செய்கின்றது.

அது அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் சில சமயங்களில் அவசியமாகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற ஆளும் கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் பங்குபற்றிய கூட்டத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தமது சீற்றத்தைக் காட்டியிருக்கின்றார்.

தமது நியாயமான கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற கோபத்தில் கூட்டத்தில் இருந்து எழுந்து திடீரென வெளியேறினார் அமைச்சர் மனோ கணேசன்.

மலையகத் தமிழருக்கு மட்டும் பெரியளவில் இழைக்கப்பட்டுள்ள அநீதியை மாற்றியமைக்க பெரும்பான்மை இனத் தலைவர்கள் தயாராக இல்லாதபோது, தொடர்ந்தும் பதவிக்காக அங்கு தலையாட்டிக் கொண்டிருக்க அமைச்சர் மனோ கணேசனின் மனம் ஒப்பவில்லை. தமது எதிர்ப்பை - கோபத்தை - ஒரே நடவடிக்கையில் அவர் காட்டினார்.

அதற்குப் பலன் கிடைத்தது. எதைச் செய்யமாட்டார்கள் எனப் பின்னடித்தார்களோ, அதைச் செய்வதற்கு சிங்களத் தலைவர்கள் இறங்கி வந்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நான்கு லட்சம் பேருக்கு இரண்டு பிரதேச சபைகளே உள்ளன. நாட்டின் ஏனைய இடங்களில் பத்தாயிரம் பேருக்கு ஒரு பிரதேச சபை இருக்கும் போது, மலையக மக்களுக்கு மட்டும் ஏன் இந்த அநீதி என்று கேட்டார் மனோ கணேசன்.

விரைவில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்னர் இந்த விடயத்தை நேர் சீராக்கி, அங்கு மேலதிக பிரதேச சபைகளை உருவாக்குவது அவசியம் என்று அவர் வலியுறுத்திய போது ஆட்சியாளர்கள் அந்தக் கோரிக்கையைப் பொருட்படுத்தி நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை.

அதனால், அரசுத் தலைவர்கள் எதிர்பார்க்காத ஒரு செயலை அவர் செய்தார். எனது மக்களின் நலனைக் கவனத்தில் எடுக்காத அரசுத் தலைவர்களின் கூட்டத்தில் நான் தொடர்ந்து அமர்ந்து இருந்து தலையாட்டுவது அர்த்தமற்றது என்று குறிப்பிட்டு அவர் விடுக்கென வெளியேறினார்.

அவரது அந்த நடத்தை அரசுத் தலைவர்களை அசைத்து விட்டது.

அவர் அப்படி வெளியேறியமையால் குழம்பிப் போன அரசுத் தலைவர்கள், எதனை அவருக்குச் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டனரோ அதனைச் செய்வதற்கு பின்னர் இணங்கினர்; இறங்கி வந்தனர்.

நுவரெலியா மாவட்டத்துக்கான புதிய உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கான உடன்பாட்டை கட்சித் தலைவர்கள் வெளியிட வேண்டியவர்களானார்கள்.

தமிழக முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கோபத்தில் வெளியேற - அதனால் அரசுத் தலைவர்களும், ஏனைய கட்சித் தலைவர்களும் வாயடைத்துப் போய் அமர - அந்தச் சந்தர்ப்பத்தைப் பார்த்து, அதே முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்தவரும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பி.திகாம்பரம், மனோ கணேசனின் கோரிக்கையில் இருந்த நியாயப்பாட்டை எடுத்து விளக்கினார்.

அந்தப் பிரச்சினையை செவிமடுத்த அரசுத் தலைவர்கள், அந்தக் கோரிக்கையை விரைந்து - நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் - நேர்சீர் செய்து, ஒழுங்குபடுத்த கொள்கையளவில் இணங்கினர்.

தேவைப்படும் சமயங்களில் கோபத்தைக் காட்டுவது அவசியமாகத்தான் படுகின்றது.

பேச்சு மூலம் - சமரசமாக - பிணக்குகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் முன்னர் மலையகத் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமானைக் கூறுவார்கள். நான்கு பெறவேண்டும் என்றால் அரசுத் தலைவர்களுக்கு முன்னால் பத்துக் கோரிக்கைகளுடன் போய் இறங்குவார்; பேச்சு நடத்துவார். ஆறு விடயங்களை விட்டுத் தந்து, கீழ் இறங்குபவர் போலத் தம்மைக் காட்டி, தமக்குத் தேவையான நன்மையையும் சாதித்துக்கொண்டு வந்து விடுவார் என்பார்கள்.

அதுபோல பேச்சு விடயத்தில் கோபத்தை - சீற்றத்தை - காட்ட வேண்டிய முறையில், காட்ட வேண்டிய அளவில், காட்டி சாதிப்பது பற்றி மனோ கணேசன் ஓர் உதாரணம் தந்திருக்கின்றார்.

இன்று நல்லாட்சி அரசு மலர்ந்து, அது நிலைத்திருப்பதற்கான பிரதான காரணங்களுள் ஒன்று வடக்கு - கிழக்கு தமிழர் தரப்பு.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய முக்கிய விடயம் குறித்து தமிழர் தரப்பு பேசிக் கொண்டிருக்கின்றது. எனினும், அந்தப் பேச்சு முச்சந்தியில் முடங்கிப் போயிருப்பதான செய்திகளே இப்போது வெளிவருகின்றன.

சில சமயங்களில் இந்த முட்டுச் சந்து முடக்கத்தில் இருந்து, அந்தப் பேச்சு வண்டியை முண்டித் தள்ளி, நெம்பி மீண்டும் உருள வைப்பதற்கு அமைச்சர் மனோ கணேசன் போன்ற ஒரு சீற்றம் - கோபம் - சத்திய ஆவேசம் - தமிழ்த் தரப்புக்கு அவசியமானதாக இருக்கலாம்.

பேச்சு நடத்தும் தலைவர்கள் இதனைக் கவனத்தில் எடுப்பது நல்லது. எதிர்பார்க்கலாமா?

# புதிய வெளிவிவகார அமைச்சரை அமெ. தூதுவர் சந்தித்துப் பேச்சு!



கொழும்பு, ஓக. 24

புதிய வெளிவிவகார அமைச்சர் திலக்மாரப்பனவை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் மக்களுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடினேன் என்று அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் மற்றும் இலங்கை வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சருக்கும் அமெரிக்கத் தூதுவருக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு இதுவாகும்.

(க)

# மாணவர் தமிழ்மொழி பாடத்தில் சித்தியெய்துவதில் பெரும் வீழ்ச்சி!



கொழும்பு, ஓக. 24

தமிழ்த் மொழி பாடத்தில் மாணவர்களின் சித்தியெய்தும் விகிதம் வீழ்ச்சி அடைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் அடைவு மட்ட குறைவு தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தமிழ் மொழிப் பாடத்தில் மாணவர்களின் சித்தியெய்தும் விகிதம் தற்போது வீழ்ச்சி அடைந்து வருகின்றமை தொடர்பாக ஆராய்வதற்காகவே நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சரின் செயலாளர் திஸ்ஸ ஹேவவிதாரண, பரீட்சை திணைக்கள ஆணையாளர் அநுர புஸ்பகுமார உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது இவ்வருடம் தமிழ்மொழிப் பாடத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்கள் கேட்டறியப்பட்டதுடன், மாகாணத்தின் சார்பாக ஆசிரிய ஆலோசகர்களால் இது விடயமாக வழங்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும், இதன்போது இந்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா.த) தமிழ் மொழி பாடவினாப்பத்திரங்கள் தொடர்பாகவும், பரீட்சை திருத்துநர்கள் தொடர்பாகவும் கவனம் எடுக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டார்.

# எனக்கும் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் எந்தக் கொடுக்கல் வாங்கல்களும் இல்லை!

## மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, ஓக. 24

எமக்கும் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் இடையில் எந்த வித கொடுக்கல் வாங்கல்களும் இல்லை என முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, விஜயதாஸ ராஜபக்ஷ, மஹிந்த தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருப்பதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எமக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இடையிலும் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இரு குற்றச்சாட்டுக்களும் உண்மைக்கு புறம்பானவை எனத் தெரிவித்துள்ளார்.

# ஈரானிய தூதுவர் முஹம்மட் செய்ரி அமைச்சர் ஹக்கீமுடன் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 24

ஈரானிய தூதுவர் முஹம்மட் செய்ரி அமிரானி, தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் ஐயூப் ஹேதாரி மற்றும் நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இரு தரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, உமாஓயா திட்டத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் தவறான கருத்து தொடர்பில் நாட்டு மக்களை தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் இலங்கை – ஈரான் நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வது பெரிதும் பயனளிக்குமென்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

மேலும், நீர் மற்றும் சுகாதார துறையில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்தும் இதன்போது ஈரான் தூதுவர் கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பில் ஈரான் நாட்டின் பிரதித்தூதுவர் எண்ரியஸ் பேர்க்கும் கலந்து கொண்டார்.

## நாளை

25.08.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அத்தம் பி.ப 5.29 வரை
திதி : சதுர்த்தி மு.இ 10.47 வரை
சுபநேரம் : 6.05 – 7.35 வரை
இராகுகாலம் : 10.35 – 12.05 வரை

# வடக்கின் தாதியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு தகுதியானவர்களை விண்ணப்பிக்க கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஒக. 24

வடமாகாண தாதியர் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்குத் தகுதி யானவர்களை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என வடமாகாண தாதிய உத்தி யோகத்தர் சங்கத்தின் செயலா ளர் க.நதீஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

## 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்புங்கள்!!

வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் அனைத் தும் மேல் மாகாண தாதியர் உத்தியோகத்தர்களை நம்பியே இயங்க வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது.

பெரும்பாலும் சகோதர மொழி பேசும் தாதியர்களே எமது மாகாணத்தில் பணியாற்றி வருகின்றார்கள். இதனால், எமது மாகாண வைத்தியசாலை களில் சிகிச்சை பெறும் சில நோயாளர்கள் மொழிப் பிரச்சி னையால் அவதிப்பட்டும் வரு கின்றனர்.

அதேநேரம் மேல் மாகாண தாதியர்கள் தமது மாகாணத்தை விட்டுபல்வேறுகஷ்டங்களுக்கு மத்தியிலும் எமது வட மாகா ணத்தில் பணியாற்றுகின்றமை பாராட்டத் தக்க விடயமாகும்.

இருப்பினும் அவர்கள் குறிப் பிட்ட காலப்பகுயின் பின்னர் தமது மாவட்டங்களை நோக்கி இடமாற்றலாகி செல்கின்றனர். மீண்டும் அதே அளவிலான மேல் மாகாண ஆளணியை நம்பியே குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, எமது மாகாணத் தின் தாதியர் சேவையானது நிரப்பப்படாது பற்றாக்குறை யாகவே தொடர்ந்தும் காணப் படுகின்றது.

இதனால், எமது மாகாணாங் களில் புதிய அலகுகளை நிர் மாணிக்க முடியாமலும், நிர்மா ணிக்க முடிந்தாலும் அதனைத் தொடர்ந்தும் இயக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைக்கு காரணம் எமது மாகாணத்தில் பலர் தாதியர் சேவைக்கு விண்ணப் பிப்பது இல்லை. கடந்த வரு டம் கோரப்பட்ட விண்ணப்பங் களில் எமது மாகாணத்தின் சில மாவட்டங்களில் மிகக் குறைந்தளவிலானவர்களே விண்ணப்பித்துள்ளனர்.

ஆகவே, இம்முறை வடக் கின் வுவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல் லைத்தீவு ஆகிய மாவட்டங் களில் இருந்து அதிகளவிலான வர்கள் விண்ணப்பிப்பதன் மூலம் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும்.

எமது மாகாணத்தில் கடந்த 2015, 2016 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சையில் விஞ் ஞானப் பிரிவில் தோற்றி மூன்று பாடங்களிலும் (3 எஸ்) சித்தியும், கல்வி பொது தராதர சாதாரணதரப் பரீட்சை யில் ஆங்கிலத்தில் சீ சித்தி பெற்றவர்களும் இதற்கு விண் ணப்பிக்க முடியும்.

தகுதியானவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை புத்தக நிலையங்களில் பெற்று விண்ணப்பித்து எமது மாகாண தாதியர் பற்றாக்குறையை தீர்க்க முன்வர வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-100)

## நீதிஅமைச்சரின் பதவியை பாதுகாக்க பௌத்த மகாநாயக்கர்கள் முயற்சி!



கொழும்பு, ஒக. 24

நீதி அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷவின் பத வியை பாதுகாப்பதற்கு பௌத்த மகாநாயக்க தேரர்கள் முயற்சி செய் கின்றனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மூன்று பீடங்களின தும் மாநாயக்க தேரர்கள் நீதி அமைச்சரை பாது காப்பதுதொடர்பில்விசேட பேச்சு ஒன்றை நடத்த உள்ளோம் என நாகதீப விஹாரையின் பீடாதிபதி வண. தியமயலகஸ்வெள ஆரியகித்தி தேரர் தெரி வித்துள்ளார்.

கொழும்பு ஊடக மொன்று எழுப்பிய கேள் விக்கு நேற்று முன்தினம் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷ வால் நாட்டுக்கும் பௌத்த மதத்திற்கும் வழங்கப்பட்டு வரும் சேவை அவசியமானது என அவர் தெரிவித்துள் ளார்.

பேச்சு எங்கு நடை பெறவுள்ளது என்பது பற்றிய விவரங்களை வெளியிட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று பீடங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மகாநாயக்க தேரர்கள் இந்தச் சந்திப் பில் பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரக் கட்சியில் எஞ்சியிருக்கப் போவது மைத்திரியும் துமிந்த திஸாநாயக்கவும் தான்!

கொழும்பு, ஒக. 24

இன்னும் சில நாள் களில் ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியில் எஞ்சியி ருக்கப்போவது கட்சி யின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வும், செயலாளர் துமிந்த திஸாநாயக்கவும் தான் என்று மஹிந்த அணி யான பொது எதிரணி யின் நாடாளுமன்ற உறுப் பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வீட்டில் கூலிக்கு இருந்தவர் வீட்டை சொந்தமாக்கிக் கொள் ளும் செயற்பாடே இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியில் நடந்துள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேறு அரசியல் சக்திக ளுக்கு அடிபணிந்துள்ளது.

இதற்கான முழுப் பொறுப்பையும் கட்சியின் தலைவரும், செயலாள ருமே ஏற்கவேண்டும்.



மஹிந்த அணியின் பிரசன்ன ரணதுங்க எம்.பி. தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்க ளுக்கு அதன் தலைமைத் துவம் மீது நம்பிக்கை யில்லை. பெரிய அளவி லான உறுப்பினர்கள் கட்சியைவிட்டு வெளி யேறி வருகின்றனர்.

கூடிய விரைவில் கட்சி யின் தலைவரும், செய லாளரும் மாத்திரமே எஞ் சியிருப்பார்கள் என்று எமக்கு கண்கூடாகத் தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பக்கமே மக் கள் உள்ளனர் என்பதை எவராலும் நிராகரிக்க முடியாது.

மக்களின் வாக்குக ளில் தெரிவாகிய நாம் மக்களின் கருத்துகளுக் குச் செவிசாய்க்க வேண் டும். தேர்தலில் தோல்வி யடைந்து தேசியப் பட்டி யல் மூலம் நியமிக்கப்பட் டவர்கள் போன்று எங்க ளால் தலையாட்ட முடி யாது.

மக்களின் விருப்பத் துக் கேற்ப மஹிந்த ராஜ பக்ஷவை மீண்டும் நாங் கள் தலைவராக்க வேண் டும். மஹிந்த ராஜபக் ஷவை தலைமைத்து வத்தில் அமர்த்தும் வரை எங்கள் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

(க)

## உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் இன்று நிறைவேறும்



என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் இன்று நிறைவேற் றப்படும் என சபை முதல் வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய் மூலவிடைக்கானகேள்வி நேரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறி யுள்ளார்.

உள்ளூராட்சி சபை கள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் இன்று வியா ழக்கிழமை விவாதத் துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு இன்றைய தினமே நிறைவேற்றப்படும் என் றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

## மஹிந்தவின் சுதந்திரக் கட்சி ஆலோசகர் பதவி; அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும்!

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் பதவி குறித்து, கட்சி யின் அடுத்த மத்திய குழுக் கூட் டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது என அமைச்சர் விஜித் விஜய முனி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் தாமே என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதி பதியாக தெரிவு செய்யப்படுபவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை வராகத் தெரிவாவார்.



அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவிக்கிறார்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வின் கட்சித் தலைமை பதவியை நிறைவேற்று ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவ தற்கு அப்போது கட்சியின் மத்திய குழுவில் நானும் கை உயர்த்தி னேன் என்றும் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா சுட்டிக் காட் டியுள்ளார். இவை மஹிந்த ராஜ பக்ஷவுக்கு நன்றாகத் தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அவர் கட்சியின் ஆலோசகராக பதவியேற்று கட்சி யின் மாநாட்டில் பங்கேற்றிருந்தார். இந்தநிலையில், தற்போது அவரின் ஆலோசகர் பதவி குறித்த கேள்வி யொன்று எழுகிறது.

எனவே, அது தொடர்பாக கட்சி யின் அடுத்த மத்திய குழுக் கூட் டத்தில் ஆராயவேண்டும் என அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா கூறியுள்ளார்.

## புதிய பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி ஜனாதிபதியுடன் சந்திப்பு!



கொழும்பு, ஒக. 24

புதிய பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியாகப் பொறுப் பேற்ற அட்மிரல் ரவீந்ர விஜேகுணவர்த்தன ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி செயல கத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இரு வரும் நாட்டின் பாதுகாப்புவிடயங்கள் குறித்து கலந்துரை யாடியுள்ளனர்.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# மாணவருக்கு எதிராகப் போராட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம்!

மட்டக்களப்பு, ஒக. 24

கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.




கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளுக்கும் நியாயமற்ற நடவடிக்கைகளுக்கும் எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்து 81 நாள்களாக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக நிர்வாக கட்டடத் தொகுதியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.




இந்த நிலையில், மாணவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு பெரும் சிரமத்தைக் கொடுக் கிறது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத் தொகுதியை மாணவர்கள் சிலர் ஆக்கிரமித்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும், நீதிமன்றம் விடுத்துள்ள கட்டளையை மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் போராட்டம் எனும் போர்வையில் எமது கலாச்சார விழுமியங்களை கொச்சைப்படுத்த வேண்டாம் எனவும் இதன்போது ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை, மாணவர்களின் முற்றுகைப் போராட்டத்தைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது.


மாணவர்களால் கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடம் இரவோடு இரவாக முற்றுகையிடப்பட்ட பின்னர் பல்கலையின் உபவேந்தர் மற்றும் பிரதி உபவேந்தர் பலர் இரவு முழுவதும் நிர்வாகக் கட்டடத்திற்குள் முடங்கியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டுள்ள மாணவர்கள் உடனடியாக நிர்வாகக் கட்டடத் தொகுதியிலிருந்து வெளியேற வேண்டும் எனவும் இதன்போது நிர்வாக உத்தியோகத்தர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## இ.போ.ச. பேருந்தில் மோதி இளைஞர் பலி!

மட்டக்களப்பு, ஒக. 24

மட்டக்களப்பு - களுதாவளை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் பரிதாபமாகப் பலியாகியுள்ளார்.



இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுக் கொண்டிருந்த இளைஞர், முன்னே சென்ற பிக்கப் ரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் எதிர்கொண்டு வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளார்.


இதேவேளை, சம்பவத்தில் உயிரிழந்தவர் களுதாவளையைச் சேர்ந்த 22 வயதுடைய ம.இதயராஜ் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட ஏழைக் குடும்பஸ்தரை நேரில் சென்று சந்தித்தார் சிறீநேசன்!

மட்டக்களப்பு, ஒக. 24

இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சு தாக்குதலில் கண் பாதிக்கப்பட்ட ஏழை குடும்பஸ்தர் ஒருவரை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் நேரில் சென்று சந்தித்துள்ளார்.



மட்டக்களப்பில் இருந்து மகரஹமவிற்குச் சென்ற இ.போ.ச பஸ் மீது இனந்தெரியாத குழுவினரால் கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் பல பயணிகள் பாதிக்கப்பட்ட நிலையில் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான தவராசாவும் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தார்.

இந்த சம்பவத்தில் அவருக்கு கண்ணொன்று முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவரை நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்துள்ளார்.



இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரால் அந்த நபருக்கு, மருத்துவச் செலவுகளுக்காக சிறு உதவித்தொகையும் வழங்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு பாதிக்கப் பட்ட மக்களை தேடிச் சென்று உதவுவது மிகவும் அரிதாக நிகழும் சம்பவம். அவ்வாறே சென்று உதவி புரிந்தாலும் கூட அதனை பிரபல்யம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் ஞா. சிறீநேசனது செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட நபரான தவராசாவுக்கு உதவ விரும்புபவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசனுடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதி விபத்தில் 6 பேர் படுகாயம்!

மட்டக்களப்பு, ஒக. 24

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் அதி சொகுசு வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து காத்தான்குடி நோக்கி வந்த சொகுசு வாகனம் மட்டக்களப்புக்கு மின்சாரம் வழங்கும் பிரதான மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.



இந்தச் சம்பவத்தால் பிரதான மின்சார கம்பம் பெரியளவில் சேதமடைந்துள்ளதுடன் வாகனமும் கடுமையான சேதங்களுக்குள்ளாகியுள்ளது என மட்டக்களப்பு பொலிஸார் கூறியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் யாருக்கும் உயிர் ஆபத்து இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர்களில் இரண்டு பெண்களும் இரண்டு சிறுவர்களும் அடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து காரணமாக மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் பகுதிக்கான மின்சாரம் மாற்று வழியில் வழங்கப்பட்டுள்ளதுடன் சத்துருக்கொண்டான், மைலம்பாவெளி, பிள்ளையாரடி உட்பட சில பகுதிகளுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# ரஷ்யாவுடன் இராணுவ ஒத்துழைப்பை விரிவாக்குவதில் இலங்கை ஆர்வம்!



## சர்வதேச பாதுகாப்பு கண்காட்சியை பார்வையிட அந்நாட்டுக்கு பாதுகாப்புச் செயலர் கபில தலைமையிலான குழு பயணம்

கொழும்பு, ஓக. 24

ரஷ்யாவில் இடம் பெறும் 'இராணுவம்2017' என்ற சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி, சர்வதேசஒத்துழைப்பைவிரிவுபடுத்தும் என்று இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கபில வைத்திய ரத்ன தெரிவித்துள்ளார்.

'இராணுவம் 2017' என்றசர்வதேசஇராணுவ-தொழில்நுட்ப கண்காட்சி, ரஷ்யாவின் அலபினோ இராணுவ பயிற்சி மைதானம், குபின்கா விமான ஓடுதளம், தேசப்பற்று அவை மற்றும் மொஸ்கோ பிராந்திய கண்காட்சிமையம்ஆகிய வற்றில்நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

உலகின் பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு குழுக்கள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்றுள்ளன.இலங்கைதரப்புகுழுவுக்கு பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன தலைமை தாங்குகிறார்.

கண்காட்சியில் பங்கேற்றுள்ளஇலங்கையின் பாதுகாப்புச்செயலர் ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழிடம் கருத்து வெளியிடுகையிலேயே பாதுகாப்புச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ரஷ்யாவிடம் உள்ள ஆயுதங்களைப் பார்வையிடுவதற்காக வந்திருக்கிறோம். ரஷ்யாவிடம் ஆயுதங்களை வாங்கிய அனுபவம் இலங்கைக்கு உள்ளது.

இங்கு வந்திருப்பது நல்ல வாய்ப்பாகும். இந்த கண்காட்சி மிகவும் சுவாரசியமாக உள்ளது. நான் இதுவரை பார்த்திராத கேள்விப்பட்டிராத கண்காட்சியாக மட்டுமல்ல, சில அறிவுகளை பெற்றுக் கொள்ளவும், சர்வதேச ஒத்துழைப்பை விரிவாக்கவும் இது உதவும்.

ரஷ்யாவின் போர்க் கப்பல்களில் இலங்கை ஆர்வம் கொண்டிருந்தது. அது தொடர்பாக கலந்துரையாடப்படுகிறது. இந்த நேரத்தில் நாங்கள் கப்பல்களை வாங்குகிறோம். அது பற்றிய பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தீவிரவாத முறியடிப்புத் தொடர்பாக, ரஷ்யாவின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும், ஏனைய நாடுகளிடம் பகிர்ந்து கொள்ளவும், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளவும்இலங்கை விரும்புகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்!



கொழும்பு, ஓக. 24

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் ரஞ்சன் ராமநாயக்க தண்டிக்கப்படவேண்டுமெனக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மனுவை மாகல்வண.கந்தே சுதந்த தேரர் மற்றும் இரண்டு பேர்தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# இராணுவத்தை விட்டு ஓடியவர்களால் சமூகத்துக்கு அச்சுறுத்தல்: இராணுவத் தளபதி

கொழும்பு, ஓக. 24

இராணுவத்தை விட்டுத்தப்பியோடியவர்களுக்கு எந்தவொரு சூழ்நிலையிலும், தனியார்துறை நிறுவனங்கள் வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடாது என்று இராணுவத்தளபதிலெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்தவாரம் ஒரே நாளில் நாடெங்கும் நடத்தப்பட்டதேடுதலில் 770 வரையான தப்பியோடிய இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.



இதுகுறித்துக் கருத்து வெளியிடும்போதே இராணுவத்தளபதிலெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களால், சமூகத்துக்கு அச்சுறுத்தல் உள்ளது.

இவர்கள் பற்றிய தகவல்களை பொதுமக்கள் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ, இராணுவ முகாமிலோ அளிக்கமுடியும்.

இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவர்களுக்கு எந்தவொரு சூழ்நிலையிலும், தனியார்துறை நிறுவனங்கள் வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடாது.

அவ்வாறு வேலை வாய்ப்புகளை வழங்குபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# வெளிவிவகார அமைச்சருடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு!



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவி யேற்றுள்ள திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் வெளி விவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவி யேற்றுள்ள திலக் மாரப்பனவுக்கு பூச்செண்டு கொடுத்து வாழ்த்து தெரிவித்த இந்திய தூதுவர், அதையடுத்து. இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் வெளிவிவகாரச்செயலர் பிரசாத் காரியவசம் மற்றும் இந்திய துணைத் தூதுவர் அரிந்தம் பக்சி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 84 பேர் மீது நீதிமன்றங்களில் வழக்கு!

பயங்கரவாத தடைச்சட்டத்துடன் தொடர்புடைய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள 84 பேர் இன்னமும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மேலும் 12 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, சட்டமா அதிபர் திணைக்களம் காவல் துறையின் விசாரணை அறிக்கைகளை ஆராய்ந்து வருகிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் மீது தற்கொலை தாக்குதல் நடத்துவதற்கான முயற்சி, முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே படுகொலை, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாமீதானபடுகொலைமுயற்சி, அனுராதபுரவில் மேஜர்ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 29 பேர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை போன்றசம்பவங்களுக்கு சூழ்ச்சி செய்தமை, உதவி செய்தமை, உடந்தையாக இருந்தமை, ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளே தற்போது விசாரணையில் இருக்கின்றன என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கைக்கான கனடாவின் புதிய தூதுவராக மக்கினொன்!

கொழும்பு, ஓக. 24

இலங்கைக்கான கனடாவின் புதிய தூதுவராக, மக்கினொன் நியமிக்கப்படவுள்ளார்.

கனடியத் தூதுவராக பணியாற்றிய ஷெல்லி வைற்றிங் அண்மையில் தமது பணியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருந்தார்.

இதையடுத்தே, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான கனடாவின் புதிய தூதுவராக மக்கினொன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அவரது நியமனம் உறுதி செய்யப்பட்டதும் கொழும்பில் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சரவைக் கூட்டத்துக்கு விஜயதாஸ ராஜபக்ஷ செல்லவில்லை!

கொழும்பு, ஓக. 24

அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறினார் என்ற குற்றச்சாட்டுக்குஉள்ளாகியிருக்கும், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு ஒருமனதாக தீர்மானித்தது.

இந்த முடிவு கடந்த திங்கள் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சரவையில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதியே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் எந்த முடிவையும் அறிவிக்காத நிலையில், நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது.



## மல்லாகம் ம.வியில் பழைய மாணவர்களின் ஒன்று கூடல்

மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் ''எழுச்சி - 2017'' என்ற முதலாவது மாபெரும் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 077 899 6137 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் அணி திரளுமாறு விழா ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா கலந்துரையாடல்

வல்லிபுர ஆழ்வார் ஆலயத் திருவிழா ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கண்ணன் மண்டபத்தில், பிரதேசசெயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களைத் தவறாது கலந்து கொண்டு ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் வழங்கி உதவுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 24.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 08 ஆம் நாள் திரிதீயைத்திதி இரவு 8.27 மணி வரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: உத்தரம் பகல் 2 மணி வரை. பின்னர் அத்தம். மரணயோகம் பகல் 2 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 1.47 மணி முதல் 3.17 மணி வரை. சுபநேரம்: காலை7.34 மணி முதல் 9.04 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை. பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த மாறுதல், தீராத பிரச்சினை தீருதல் மனத் திருப்தியளிக்கும்.

**ரிஷபம் :** இன்பமான நாள். பணவரவு தாராளமாக இருக்கும். தொழில், வியாபாரம் முன்னேற்றமடையும். குடும்பம் குதூகலமாய் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரச உதவியும், பாராட்டும் கிடைக்கும்.

**மிதுனம் :** யோசனையான நாள். செலவுகள் அதிகமாகும். குடும்ப உறவில் சலசலப்பு இருக்கும். வியாபாரத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். சொத்துக்கள் விஷயத்தில் மனக்குழப்பம் ஏற்படும்.

**கடகம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. செலவுகள் கட்டுக்கடங்காது. வியாபாரத்தில் ஓரளவு முன்னேற்றம், சகஜநிலை ஏற்படும்.

**சிம்மம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் பல வழிகளாலும் வந்து சேரும். வேலை எதிர்பார்ப்பவர்களுக்கு வேலை கிடைத்து, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**கன்னி :** மகிழ்ச்சியான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். பிரிந்து சென்ற குடும்பத்தினர் ஒன்று சேர்வார்கள். சிலருக்கு கௌரவப் பதவிதேடிவரும். சுப, சோபன காரியங்கள் திருப்தியாக முடியும்.

**துலாம் :** சலனம் மிகுந்த நாள். தொழிலில் வீண் அலைச்சலும், மனநிம்மதியும் குறையும். மறைமுக எதிரிகளால் பிரச்சினைகள், மனப்பயம் உண்டாகி நீங்கும். வரவைப் போல் செலவுகளும் அதிகமாகும்.

**விருச்சிகம் :** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமையான சூழல் நிலவும். செய்தொழில்முன்னேற்றம் அடையும்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. பணி நெருக்கடி பொருள் நஷ்டம், வீண் அலைச்சல் ஆகியவை ஏற்படும். சிலருக்கு வாகனத்தால் கஷ்டநஷ்டமுண்டாகும்.

**மகரம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. செல்வம், செல்வாக்கு, பெரியோர்கள் ஆதரவு எல்லா வகையிலும் திருப்தி உண்டாகும். செய்தொழில் முன்னேற்றமடையும்.

**கும்பம் :** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் விஷயமாய் அலைச்சல் அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையால் சிலர் கடன் வாங்க அலைவார்கள். மாணவர்கள் சிலர் வெளிநாடு செல்வார்கள்.

**மீனம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலம் குறையும். வீண் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3, 4 ஆம் சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள் ஆகியவற்றில் உதயமானோர் இந்நாளில் சுபகருமங்கள் நீக்கவும்.

# அரச சலுகைகள் சிங்கள மொழியில்: அதனால் தமிழருக்கு நன்மையில்லை!

### தமிழுக்கு மொழிபெயர்க்கக் கோருகின்றார் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, ஓக.24

அரசியால் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் சிங்களச் சொற்களால் மாத்திரம் அறிமுகப்படுத்தப்படுவதால் தமிழ் மக்கள் அந்தச் சலுகைகளை அனுபவிக்க முடியாத நிலைக்குத்தள்ளப்படுகின்றனர் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

அந்தச் சலுகைகள் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனிடம் கேள்வி ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அது தொடர்பாக அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இதுவரையில்எமதுநாட்டை ஆட்சி செய்து வந்துள்ள அரசாங்கங்களின் மூலமாகவும், தற்போதைய அரசின் மூலமாகவும் பல்வேறு மக்கள் பயன்பாட்டுத் திட்டங்கள் அவ்வப்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, செயற்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக, இந்த அரசு ஆட்சிப்பீடம் ஏறியதன் பின்னர், நில மெஹெவர எனும் செயற்திட்டம் ஜனாதிபதியின் துறை சார்ந்து ஆரம்பிக்கப்பட்டு, வடக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அதேபோன்று, அண்மையில் நிதி அமைச்சரால் மக்களுக்கான சில கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் தனிச் சிங்கள மொழிச் சொற்களில் வழங்கப்பட்டு வருவதன் காரணமாக, தமிழ் மொழி மாத்திரம் அறிந்த மக்களால் அந்தத் திட்டங்களை உணர்வு பூர்வமாக உணர்ந்து, உள்வாங்கி, அவற்றின் மூலமான பயன்களை உரிய வகையில் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

கடந்த காலங்களில் ''திவிநெகும'' செயற்திட்டத்திற்கு ''வாழ்வின் எழுச்சி'' எனவும், ''பிம்சவிய'' செயற்திட்டத்திற்கு ''நில சக்தி'' எனவும் தமிழில் பெயரிட்டு வழங்குவதற்கும், இன்னும்சில ஏற்பாடுகளைமேற்கொள்வதற்கும் எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில், இதற்கு முன்பிருந்த அரசுகளாலும், தற்போதைய அரசாலும் அறிமுகப்படுத்தப்பட்ட, அறிமுகப்படுத்தப்படுகின்ற இத்தகைய செயற் திட்டங்களின் சிங்கள மொழிப் பயன்பாட்டுச் சொற்களைத் தமிழ் மொழியிலும் மொழி மாற்றம் செய்வதற்குத் தங்களது அமைச்சு மூலமாக நடவடிக்கை எடுக்க முடியுமா எனக் கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கான பதிலையும், அதற்கானநடவடிக்கையையும் அமைச்சர் மனோ கணேசன் விரைவில் வழங்குவார் என்று எதிர்பார்க்கிறார் எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ம)

## 'இது எமது விடுமுறைக் காலம்'
# தம்பிமாரே பட்டம் விடுவோம் வாரீர்! மாணவருக்கான போட்டி வியாழனன்று!!
### யாழ்.மாநகர சபை மைதானத்தில்

இலக்கியத்தை நேசிக்கும் மனிதநேயப் பண்புகளால் மேம்பட்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பேரெண்ணைத்தோடு பல்வேறு பட்ட கலை, கலாசார மேம்பாட்டு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் '' பன்னிரு மாத விளக்கு'' நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் பட்டம் விடும் போட்டியை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரிடம் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு. யாழ்.பிரதேச செயலாளரும் அதிகார சபைத் தலைவருமான பொ.தயானந்தன் அறிவித்துள்ளார்.

போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டுவோருக்கு பணப்பரிசும் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

முதல் பரிசு 5,000 ரூபா, இரண்டாம் பரிசு 3,000 ரூபா, மூன்றாம் பரிசு 2,000 ரூபா ஆகும்.

தகுதியான பட்டங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும் சிறுவர்கழக பொறுப்பாசிரியர் அல்லது கிராமசேவை உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலோடு போட்டியில் பங்குபற்றி பயனடையலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரம்
# யாழ்.மாநகர சபைப் பகுதியில் மூன்று நாள்கள் களத்தரிசிப்பு!

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை 3 நாள்கள் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி செய்திக்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில்-

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாக்குமுகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன்மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபடமுடியும்.

இந்த தேசிய நிகழ்வு அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திடசகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்த நாள்களில் பின்வரும் கிராம அலுவலர் பகுதிகளில் டெங்கு களத்தரிசிப்பு நடைபெறும்.

- ★ 29.08.2017 வண்ணார் பண்ணை ஜே/98, ஜே/100, ஜே/102,
- ★ 30.08.2017 நாவாந்துறை ஜே/85, ஜே/87, ஜே/88,
- ★ 31.08.2017 நல்லூர் ஜே/109, ஜே/108, ஜே/107.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையானசட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது. (இ)

# வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில்

# முஸ்லிம்களுக்கு நிர்வாக அலகு ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே அவர்களுக்கு அரசியல் பலம்!

**ஆஸியில் தமிழ் மக்களுடனான சந்திப்பின் போது கஜேந்திரகுமார்**

**ஆஸ்திரேலியாவின், சிட்னி நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற தமிழ் மக்களுடனான சந்திப்பு ஒன்றின் போது, வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம் பலம் பின்வருமாறு பதிலளித்தார்:**

தற்போதையை கிழக்கு மாகாண எல்லைகள் மற்றும் குடிப்பரம்பலை அடிப்படையாக வைத்து நோக்கும் போது, முஸ்லிம் மக்களின் அனுமதியில்லாமல் வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்பதே யதார்த்தமானது. அதில் மாற்றுக் கருத்து இல்லை.

இன்று இருக்கும் நிலையில், பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று கோரப் போவதில்லை. அதிலும் மாற்றுக் கருத்து இல்லை.

ஏனென்றால், தமிழ் மக்களால் அவர்களது அரசியற் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைகள் இதுவரை முஸ்லிம் தலைமைகளுடன் இந்த விடயம் தொடர்பாகப் பேசவில்லை. அவர்களுடன் பேசி, அவர்களது நலன்களைப் பேணுவது தொடர்பில் ஓர் உறுதிப்பாடு அவர்களுக்கு வழங்கப்படாத வரைக்கும், அவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்குக் கண்களை மூடிக்கொண்டு ஒத்துழைக்கப் போவதில்லை. அதுவரைக்கும், தமிழ் முஸ்லிம் மக்கள் தம்மிடையே ஓர் இணக்கப்பாட்டிற்கு வரப் போவதுமில்லை.

### முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் இன்று...!

ஆனால், இன்னொரு பக்கத்தில் போர் முடிவடைந்த பின்னர் முஸ்லிம் மக்களுக்கு ஒன்று நன்றாக விளங்கியுள்ளது. அதாவது தமிழ்த் தேசிய அரசியலை அழிக்கவேண்டும் என்பதையே முதல் தெரிவாகவும் தனது இலக்காகவும் சிங்கள தேசம் இதுவரை வைத்திருந்தது. அவ்வாறாகத் தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கான வழிமுறைகளுள் ஒன்றாக முஸ்லிம் அடையாளங்களை வளர்க்க வேண்டும், முஸ்லிம் தனித்துவத்தை வலியுறுத்த வேண்டும், முஸ்லிம்களைப் பலப்படுத்த வேண்டும் என்ற கோணத்திலும் சிங்கள தேசத்தவர்கள் செயற்பட்டார்கள்.

### சிங்கள தேசத்தவர்களுக்கு

ஆனால், இன்று தமிழர்களின் முதுகெலும்பை உடைத்திருக்கிறோம் என்ற நம்பிக்கையில் இருக்கின்ற சிங்களதேசம், தமிழரைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தாம் வளர்த்துவிட்ட முஸ்லிம்கள், தற்போது பொருளாதார ரீதியாக இலங்கையில் ஆதிக்கம் செலுத்தக்கூடியளவுக்கு வளர்ந்துவிட்டார்கள் என்ற விடயத்தைத் தமக்கான ஒரு சவாலாகவே சிங்கள தேசத்தவர்கள் பார்க்கின்றார்கள்.

இன்று கிழக்கில் காணி பறிப்பு என்பது தமிழருக்கும் நடைபெற்றாலும் கூட, முஸ்லிம்களை விசேடமாகக் குறிவைத்தே பெருமளவில் நடைபெறுகின்றது.

### முஸ்லிம்களை இலக்கு வைக்கும் பொதுபலசேனா

பொது பல சேனா போன்ற அமைப்புக்கள், முஸ்லிம்களைத் திட்டவட்டமாக குறிவைத்தே சிறிலங்கா அரசினாலேயே உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. முஸ்லிம்களை இலக்காக வைத்தே அவர்களது அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்பது உலகறிந்த விடயம்.

கிழக்கிலே எமது தொடர்ச்சியான உரையாடல்கள் மூலமாக நாம் கண்டறிந்த ஒரு விடயம் என்னவென்றால் இன்றைய இளம் மற்றும் படித்த முஸ்லிம் மக்கள் மட்டத்தில், வடக்கு கிழக்கில், விசேடமாக கிழக்கில், தமது இருப்பை உறுதிப்படுத்துவதென்றால், தமிழர்களுடன் தாம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வராமல் சிங்கள தேசியவாதம் ஒருபோதுமே தமது இருப்பை உறுதிப்படுத்தவிடப் போவதில்லை என்பதைத் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளனர்.

அத்தோடு சித்திலெப்பே ஆய்வு அமையத்துடன் நாம் ஏற்கனவே கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். அவர்கள் மிகவும் தெளிவாக வடக்கு கிழக்கு இணைப்பையே விரும்புகின்றார்கள்.

### பேராசிரியர் அமீர் அலி ஒரு தமிழ்த் தேசியவாதி

உதாரணமாக ஆஸ்ரேலியாவில், மெல்பேண் நகரத்தில் வாழுகின்ற பேராசிரியர் அமீர்அலி ஒரு தமிழ்த் தேசியவாதி. அவர் தமிழ் மற்றும் முஸ்லிம் என்று பிரித்து நோக்குபவரல்லர். ஆனால் முஸ்லிம்களுக்கு பிழைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று கூறுகின்ற அவர், அவை ஏதோவொரு வகையில் தீர்க்கப்படல் வேண்டும் என்றும், நாம் ஒரு பொது அடையாளத்தில் சிந்திக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

அவரது பார்வையிலே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் முஸ்லிம்களின் எதிரி. அந்த கட்சிதான் முஸ்லிம் மக்களை ஓர் இனவாதச் சிந்தனையோடு வழிநடத்திச் செல்கின்றது என்ற நிலைப்பாட்டில் உள்ளவர் அவர். அந்தவகையில், கணிசமான மாற்றங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மறுபக்கத்தில் எங்களது தமிழ் மக்களைப் பொறுத்தவரை, முஸ்லிம் மக்களுடைய வளர்ச்சியை விரும்பாத சில தரப்புக்கள், முஸ்லிம் என்ற தனித்துவமான ஓர் இனம் கிடையாது என்றும், முஸ்லிம்கள் தமிழ் இனத்தினுடைய ஓர் அங்கமாக இருக்கின்ற இஸ்லாமியர்கள் என்ற கோணத்திலேயே அணுகப்பட வேண்டும் என்றும் கூறுகின்றார்கள். ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தக் கருத்தை முற்றுமுழு தாக நிராகரிக்கின்றது. எமது நிலைப்பாடு என்னவெனில் ஓர் இனத்தின் அடையாளம் எதுவென்பதை, அந்த மக்கள் சமூகமே தீர்மானிக்க வேண்டும். தாம் எவ்வாறாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பது அந்த இனத்தைப் பொறுத்த விடயம்.

சிங்களவர்கள் தமிழர்களைப் பார்த்து தமிழர்கள் ‘சிறிலங்கர்கள்’ என்று அடையாளப்படுத்துவதை அல்லது அவ்வாறு அழைப்பதை நாம் ஒருபோதுமே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தமிழர்களாகிய நாங்கள்தான் எங்களது இனத்தின் அடையாளம் என்ன என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதேபோலவே, முஸ்லீம்களும், தமது அடையாளத்தை எவ்வாறு பேண விரும்புகின்றார்கள் என்பதனை, அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

### தமிழர் தாயகத்தில் முஸ்லிம்களும் அங்கம்

எமது கட்சியைப் பொறுத்த வரை நாங்கள் முஸ்லிம் மக்களுக்குச் சொல்வது என்னவெனில் இணைந்த வடக்கு கிழக்கை நாம் தமிழ்த் தாயகம் என்று கூறுகின்றபோது, ஒரு மொழி ரீதியான பாரம்பரிய நிலப் பிரதேசமாகவே கருதுகின்றோம். தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பேசுகின்ற மக்களின் தாயக நிலப்பரப்பாகத்தான் தமிழர்கள் அதைக் கருதுகின்றார்கள். மாறாக தமிழர் தாயகம் என்று கூறுகின்றபோது, எந்தவோர் இடத்திலும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களை ஓரம்கட்டிவிட்டு, வெறுமனே தமிழ் மக்களுக்கு மட்டுமே தாயகமான ஒரு நிலப்பரப்பாக நாங்கள் இணைந்த வடக்கு கிழக்கைக் கருதுவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் கூட இதே நிலைப்பாட்டுடனேயே இருந்தார்கள். தமது இந்த நிலைப்பாட்டை, முஸ்லிம் தலைவர்களுக்கும் அவர்கள் தெளிவுபடுத்தியிருந்தார்கள்.



### கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனித்துவ அரசியல் பலம்

எமது கட்சியின் நிலைப்பாடு என்னவெனில் - எமது முதன்மையான தெரிவு என்னவெனில் - நாம் வடக்கு கிழக்கு மாகாணங்களின் முழுமையான இணைப்பையே விரும்புகின்றோம். அந்த இணைந்த வடக்கு கிழக்கில் இன்றைய யதார்த்தம் என்னவென்றால், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் தனித்துவமான அரசியல் பலம் உடையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எண்ணிக்கையில் கூடுதலாகவும், செறிவாகவும், பரவலாகவும் அங்கு வாழ்கின்றமையால், அவர்களது எண்ணிக்கையும் பொருளாதார வலுவும் கிழக்கு மாகாணத்தில் ஓர் அரசியல் பலமாக மாறியுள்ளது. அதனால் அவர்கள் தமது அரசியல் பலத்தை இழக்க விரும்புகின்றார்கள் இல்லை. அதில் ஒரு நியாயம் இருக்கின்றது. எங்களைப் பொறுத்த வரையில் இணைந்த வடக்கு கிழக்கில், முஸ்லிம்களின் அரசியல் நலன்கள் முழுமையாகப் பேணப்படக்கூடிய வகையில் அவர்களுக்கான தனித்த அரசி யல் அலகு ஒன்றை உருவாக்குவதற்கும் நாங்கள் தயாராகவும் உறுதியாக இருக்கின்றோம். ஏனென்றால் முஸ்லிம்கள் தமிழர்களுடன் சேர்ந்து, வடக்கு கிழக்கை ஓர் இணைந்த தமிழ் பேசும் தாயகமாக ஏற்று வாழும் முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.

ஆனாலும், தமிழர்கள் இவ்வாறான ஓர் ஏற்பாட்டுக்குத் தயாராக இருக்கின்றபோதும் அதனை ஏற்றுக்கொள்ளாமல், தாங்கள் தமிழ் மக்களுடன் இணைந்து வாழத் தயாராக இல்லை என்பதுவே முஸ்லிம் மக்களின் முடிவாக இருக்குமிடத்து, தமிழர்கள் அவர்களை போகவிட வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு ஆகும். ஆனால், அவர்கள் அவ்வாறு பிரிந்து போவது என்றால் கூட, ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தையும் அவர்கள் எடுத்துக் கொண்டு போக முடியாது. ஏனென்றால் தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்று கூறுவதற்கு அவர்களுக்கு எவ் வளவு உரிமை உள்ளதோ. அதேபோன்று, வடக்கு கிழக்கு முழுவதிலும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும், தாம் ஒன்றாகச் சேர்ந்து வாழ் வதற்கான உரிமை உள்ளது. அதாவது எமது கருத்து என்னவெனில் கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்கள் தவிர்ந்த தமிழ் பிரதேசங்கள் அனைத்தும் இணைந்த வடக்கு கிழக்கு மாநிலத்தின் நிர்வாகத் திற்குள் ஒன்றாக வரவேண்டும். இது எமது கட்சியின் இரண்டாவது தெரிவு.

அப்படியும் இல்லாமல் முற்றுமுழுதான ஒரு தனி நிர்வாக அலகாகக் கிழக்கு முஸ்லிம் பிரதேசங்கள் பிரிந்து நிற்கப்போகின்றன எனில், அம்பாறை மாவட்டம் நிச்சயமாக கிழக்கு மாகாணத்திலிருந்து பிரியப்போகிறன்றது. அம்பாறை மாவட்டத்தில் பாரம்பரியமான தமிழ்ப் பிரதேசங்கள் இருக்கின்றன. அதேபோல, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கணிசமான அளவுக்கு பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள் இருக்கின்றன. அப்படியான முஸ்லிம் பிரதேசங்கள், நிலத் தொடர்பற்ற வகையில், முஸ்லிம் மாநிலமாக இணையலாம். அதேபோல, அம்பாறை மாவட்டத்தில் இருக்கக் கூடிய தமிழ் பாரம்பரிய பிரதேசங்கள், இணைந்த வடக்கு கிழக்கு தமிழ் நிர்வாகத்துடன் நிலத் தொடர்பற்ற வகையில் இணையலாம். இது எமது கட்சி முன்வைக்கும் மூன்றாவது வழி.

இவ்வாறாக, நாம் மூன்று வழிகளை முன்வைக்கின்றோம். இருந்தாலும், எமது கட்சியின் முதன்மையான நிலைப்பாடு, வடக்கு கிழக்கு முழுமையாக இணையவேண்டும் என்பதேயாகும். அவ்வாறாக வடக்கு கிழக்கு முழுமையாக இணைந்த ஒரு நிர்வாக அலகு ஏற்படுத்தப்படுகின்ற போதுதான் முஸ்லிம் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழுகின்ற ஒரு நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களுக்கு ஓர் அரசியல் பலத்தை கொடுக்கும் என்பதையும் நாம் முஸ்லிம் மக்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.★

# உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகள் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டனர்!

## இவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் நானே பொறுப்பேற்க வேண்டி வரும் என்கிறார் நீதிபதி

வவுனியா, ஓக. 24

அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகள் நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு தவணைக்காக அழைத்து வரப்பட்டிருந்தனர்.

2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், இடைக்காடு விக்டர் முதலாம் முகாமில் வைத்து 18 கடற்படை வீரர்கள் மற்றும் 8 இராணுவத்தினருக்கு மரணத்தை விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள குறித்த 3 அரசியல் கைதிகளும் இன்று காலை 9 மணிக்கு வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்களது வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில், 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாத காலப் பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வைத்து 18 கடற்படை வீரர்கள் மற்றும் 8 இராணுவ வீரர்களுக்கு மரணத்தை விளைவித்தனர் எனப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இராசதுரை திருவருள், மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பகிர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி மதியரசன் சுலக்சன் மற்றும் கணேசன் தர்சனுக்கும் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி முதலாம் எதிரியான இராசதுரை திருவருள் என்பவரையும் இவ் வழக்கில் இணைத்து வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், இந்த வழக்கு விசாரணைவவுனியா மேல் நீதிமன்றத்தில் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த வழக்கை நடத்துவதற்கு சிரேஷ்ட அரச சட்டவாதி ஒருவரை நியமித்திருப்பதாகவும், இந்த வழக்கின் சாட்சி ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாகவும் இவ் வழக்கை வேறு ஒரு நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கான தவணை வழங்குமாறும் கோரப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினத்திற்கு தவணை வழங்கப்பட்டு வழக்கு நீதிமன்றத்துக்குஅழைத்தபோது இந்த வழக்கு தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு மேலதிககால அவகாசம் தேவை என அரச சட்டவாதியால் தெரிவிக்கப்பட்டது.



இந்த விடயம் தொடர்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்த அரசியல் கைதிகள் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வழக்கு கடந்த 4 வருடங்களாக இந்த நீதிமன்றத்திலே தவணை வழங்கப்பட்டு வருகிறது. நாம் 8 வருடங்களும் 3 மாதமும் விளக்க மறியலில் இருந்து வருகிறோம். இந்த வழக்கு இதுவரை காலமும் விளக்கத்திற்கு எடுக்காததன் காரணமாக சாம் மூவரும் கடந்த 20 ஆம் திகதி முதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இன்று (நேற்று) வரை 4 நாள்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகிறோம் என்றும் தெரிவித்தனர்.

இந்த வழக்கு இந்த நீதிமன்றத்திலேயே இடம் பெறவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் சாகும்வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோம் எனவும் என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தெரிவிக்கையில்-

இந்த வழக்கு கடந்த 4 வருடங்களாக இந்த நீதிமன்றத்திலே நடந்து வருகின்றது. இவர்கள் கிட்டத்தட்ட கடந்த 8 வருடங்களாக விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். தற்போது உண்ணாவிரதத்தில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள்இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு அவர்களது உயிருக்கு ஏதும் ஏற்பட்டால் அது தொடர்பில் நான் பொறுப்புக்கூற வேண்டியவனாக உள்ளேன்.

அத்துடன், பயங்கரவாத தடைக்கட்டளை சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளை அன்றாடம் விளக்கத்திற்கு எடுத்து முடிவுறுத்துமாறு பிரதம நீதியரசரால் மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த வழக்கை விசாரணைக்கு நியமிப்பதாகவும் அனைத்து சாட்சிகளுக்கும் அழைப்பு கட்டளை பிறப்பித்ததுடன் வழக்கை செப்ரெம்பர் மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளுக்கு நியமித்தார். (க-100)

# தேசிய இறைவரிச் சட்டமூலம் மீது எதிர்வரும் 6 ஆம் திகதி வாக்கெடுப்பு!

கொழும்பு, ஓக. 24

தேசிய இறைவரிச் சட்ட மூலம் தொடர்பில் நாளை விவாதம் நடத்தப்பட்டாலும் எதிர்வரும் 6ஆம் திகதியே வாக்கெடுப்பு நடத்தப்பட்டுஅதுநிறைவேற்றப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மஹிந்த ஆதரவு அணி எம்.பியான பந்துல குணவர்தன கேள்வி எழுப்பியிருந்தார்.

அதாவது, தேசிய இறைவரிச் சட்டம் வெள்ளிக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அதில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. திருத்தங்கள் எவை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே, இன்று (நேற்று) அல்லது நாளை (இன்று) அவை எமக்கு கையளிக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குச் சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பதிலளிக்கையில்-

தேசிய இறைவரிச் சட்ட மூலம் வெள்ளிக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும் அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப் படாது. 100 வரையான திருத்தங்கள் இருக்கின்றன.

அவை பற்றி கதைப்பதற்கு பிறிதொரு தினம் வழங்கப்படும். எதிர்வரும் 6 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# விடுதி சுற்றிவளைப்பு: இரு பெண்கள் கைது!

கொழும்பு, ஓக. 24

கல்கிசை பிரதேசத்தில் நடத்தி வந்த உல்லாச விடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு இரண்டு பெண்கள் மற்றும் ஓர் ஆண் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் உல்லாச விடுதி நடத்தப்படுகிறது எனப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கமைய இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



சந்தேக நபரான ஆண் இந்த உல்லாச நடவடிக்கைகளுக்கு முகாமைத்துவம் மேற்கொண்டமை தொடர்பில்கைது செய்யப்பட்டுள்ளார்.

38 வயதான பொரளைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

காலி வீதிக்கு அருகில் அமைந்துள்ள கட்டடத்தில் இவர்கள் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இதனை நடத்தி வந்துள்ளனர்.

விபசார தொழில் ஈடுபட்டமை தொடர்பில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கல்கிசை மற்றும் பெந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 27 மற்றும் 34 வயதுடைய பெண்கள்எனபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு பெண்களும் நேற்று கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவிருந்தனர். (க)

# எஞ்சியுள்ள கேப்பாபிலவு காணிகளை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை!

## அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

கேப்பாபிலவு மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் எஞ்சியுள்ள காணியில் 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, அங்குள்ள இராணுவ முகாமை வேறோர் இடத்தில் அமைப்பதற்கான நிதியை அரசு வழங்கவுள்ளது என அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நாடாளு மன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில், கேப்பாபிலவில் காணப்படுகின்ற இராணுவ முகாமை பிறிதோர் இடத்தில் அமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என் றும் அமைச்சர் கயந்த கருணா திலக்க குறிப்பிட்டார்.





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



74



**அத்தியாயம் - V**

## நெருக்கமான சுற்றிவளைப்புகள்

வீட்டிலிருந்து வெளியேறுமாறு எமது முதல் உள்ளுணர்வு கூறியது. பாலாவின் இன்சுலின் பையைக் கையில் எடுத்தேன். செருப்பை மாட்டினோம். இருளில் பாய்ந்தோம். இரண்டு குழுக்களாகப் பிரிந்து, சிலராவது உயிர்தப்புவோம் என்ற நம்பிக்கையோடு எதிரெதிர் பக்கம்நழுவினோம். இருளில் தடவித் தடவிச் சென்றோம். எங்கே இருக்கிறோம் என்பதோ, எங்கே போகப் போகிறோம் என்பதோ தெரியவில்லை. சிறிது தூரம் நடந்து சுத்தமான காற்றை சுவாசித்த பின், சிந்தனை உணர்வும் தெளிவடைந்தது. தெளிவில்லாமல் வெறுமே இருட்டில் உழல்வதால் நிலைமை மேலும் மோசமாகும் என்பது தெளிவாகியது. ஒழுங்கைகள் வழியாகத் தொடர்ந்து செல்வோமே என்றால், எந்த இந்தியப் படையினரைத் தவிர்க்க விரும்புகிறோமோ, அதே படையினரின் கரங்களில் சிக்குவோம் என்பதும் உறுதியாகத் தெரிந்தது. ஆகவே, முதலில் ஒழுங்கைகளைத் தவிர்க்கத் தீர்மானித்தோம். உடனடியாகவே ஒரு வேலியால் பாய்ந்து, காய்கறித் தோட்டம் ஒன்றுக்குள் நுழைந்தோம். மிளகாய் கன்றுகளுக்கு மத்தியில் அமர்ந்து எமது நிலைமையைப் பரிசீலனை செய்தோம். எங்கும் படையினர் இருந்தனர். எங்கே போவது என்பது எமக்குத் தெரியாது. சுக்ளாவும் அகப்பட்டு விட்டார். என்ன செய்யலாம் என்பதை அமைதியாக உட்கார்ந்து எடை போட்டோம். திடீரென்று யாரோ முணு முணுப்பது எனது காதில் விழுந்தது. சத்தமில்லாமல் அப்படியே உறையுமாறு மற்றவர்களுக்கு உணர்த்தினேன். தூரத்தில் யாரோ பேசும் ஒலி எனக்குக் கேட்டது. பேச்சு ஒலி அருகே வர எல்லோரையும் தரையிலே படுத்துவிடுமாறு சைகையால் காட்டினேன். கீழே படுத்து மிளகாய் மரங்களூடாக எம்மை எவரும் காணமாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டோம். ஹிந்தி மொழியில் பேசுவது உரத்துக் கேட்டது. சப்பாத்துக் காலடியும் காதில் கனமாக விழுந்தது. மூச்சை அடக்கிக் கொண்டோம். பீதியால் உறைந்துபோன எங்கள் உடல்களின் மேலே நட்சத்திரங்களின் மங்கலான ஒளி படர்ந்திருந்தது. படையினரின் காவல் அணியினர் சில அடி தூரத்தில் இருந்த எம்மைக் கடந்து சென்று கரைந்து போய் விட்டார்கள். அதிஷ்டம் எம் பக்கம். படையினரும் கெட்டித்தனம் அற்றவர்களாக இருந்தார்கள். தெருவின் கரையோரங்களை அவர்கள் நன்றாகப் பார்க்கவில்லை. எழுந்து உட்கார்ந்து ஆழமான மூச்சை உள்ளிளுத்தோம். நாம் நூலிழையில் உயிர் தப்பியிருக்கின்றமையை உணர்ந்தோம். பாலாவும் ஏனையோர்களும் நட்சத்திர வெளிச்சத்தில் அடையாளம் தெரியக் கூடிய தங்கள் மேற்சட்டைகளைக் கழற்றினார்கள். அதன் பின்னரும் சிறிது காத்திருந்தோம். சில நிமிடங்களில் மீண்டும் பேச்சொலியும் படையினர் வருவதும் கேட்டன. அதே காவல் உலா அணி எமது பக்கமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தது. முதல் செய்தமைபோல எம்மைக் கடந்து சென்றார்கள். தூரத்தில் ஒரு துப்பாக்கி வேட்டுக் கேட்டது. பாவம் யார்மீது குறி தைத்ததோ தெரியவில்லை.

நாம் அங்கு அப்படியே இருக்க முடியாது என்பதை உணர்ந்தோம். விடிந்து விட்டால் படையினரின் துப்பாக்கி இலக்குக்கு உள்ளாவோம். தோட்டத்துக்கு அப்பால் தூரத்தில் ஓர் ஒளி தெரிந்தது. அது நம்பிக்கை ஒளிக்கீற்றையும் தந்தது. போராளி ஒருவருக்கு அந்தப் பகுதி பரிச்சயமாகத் தோன்றியது. ஆனால், அங்கே போவதற்குத் திறந்த வெளியைக் கடக்க வேண்டும். எமக்கு வேறு வழி இல்லாததால் அங்கே செல்லத் தீர்மானித்தோம். உழுதிருந்த வயல் ஊடாக மண் கட்டிகளில் தடக்கி விழுந்து பதுங்கியபடியே நகர்ந்தோம். சில யார் தூரமே ஒரு மைல் போலப் பட்டது. நல்ல காலம் அந்த வயலையும் அதன் சொந்தக்காரரையும் எமக்கும் தெரியும். இரவை அங்கேயே கழித்தோம்.

பகல் ஒளியில் ரதி வீட்டுக்குத் திரும்பிச் சென்றோம். ஆனால், அங்கே நீண்ட நேரம் தரிக்க முடியவில்லை. தேடுதல் வேட்டை முழுமூச்சாக நடந்து கொண்டிருந்தது. மாலை ஆறு மணியளவில் பீதியடைந்த மக்கள் 'ஆமி', 'ஆமி' என்று உரத்துக் கத்துவது ஊரெங்கும் எதிரொலித்து எல்லோருக்கும் எச்சரிக்கை கொடுத்தது. ரதியின் வீடும் சோதனைக்கு உள்ளாகும் என்பது எமக்குத் தெரியாது. தாம் தேடுபவர்கள் எங்கே ஒளிந்திருப்பார்கள் என்று தமக்குத் தெரிந்த இடங்களில் படையினர் கவனமாகத் தேடுதல் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

எமது மெய்க்காவல் போராளியான கிங்ஸ்லி சைக்கிளில் தாவ, பாலா முன் தண்டு இருக்கையில் அமர அவர்கள் பாய்ந்தார்கள். அடுத்த சைக் கிளில் எனக்கு இருக்கை. போராளிகள் தம் பாட்டில் கொண்டு சென்ற இடத்துக்குப் போய்க் கொண்டிருந்தோம். அந்த நேரம் பின்னால் உள்ள படையினருக்கு நான் அஞ்சவில்லை. படையினரிடம் இருந்து கடும் வேகத்தில் ஒழுங்கைகளால் ஓடிக்கொண்டிருக்கும்போது, எமக்கு முன்னே போய்க் கொண்டிருக்கும் பாலாவின் சைக்கிளை பிடித்துவிட வேண்டும் என்பதே எனது ஒரே தவிப்பாக இருந்தது.

அதேவேளை, வடமராட்சியில் எமக்குப் பாதுகாப்பு வழங்கிய அத்தனை வீடுகளும் அடுக்காக சோதனை இடப்பட்டன. நாம் வெளியேறிய பின் ரதியின் வீட்டை படையினர் மொய்த்தார்கள். ஆனாலும்,தமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு தாய்க்குரிய மனஉறுதியும், கடினமான உலகுக்கு முகம் கொடுத்து வந்த பல்லாண்டு அனுபவமும் அவரை வேகமாகச் சிந்திக்க வைத்தது. சித்திரவதைப் பழிவாங்கலில் இருந்து தப்பும் வண்ணம் நடந்து கொண்டார். கடும் எச்சரிக்கையோடு அவரை விட்டமையால், அவருக்கோ அவருடைய பிள்ளைகளுக்கோ பாதகம் எதுவும் நேரவில்லை. ஆனால், துன்னாலையில் இருந்த கள் இறக்கும் குடும்பத்தினருக்கு பாவம்

வடமராட்சியில் எமக்குப் பாதுகாப்பு வழங்கிய அத்தனை வீடுகளும் அடுக்காக சோதனை இடப் பட்டன. நாம் வெளியேறிய பின் ரதியின் வீட்டை படையினர் மொய்த்தார்கள். ஆனாலும்,தமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு தாய்க்குரிய மனஉறுதியும், கடினமான உலகுக்கு முகம் கொடுத்து வந்த பல்லாண்டு அனுபவமும் அவரை வேகமாகச் சிந்திக்க வைத்தது. சித்திரவதைப் பழிவாங்கலில் இருந்து தப்பும் வண்ணம் நடந்து கொண்டார். கடும் எச்சரிக்கையோடு அவரை விட்டமையால், அவருக்கோ அவருடைய பிள்ளைகளுக்கோ பாதகம் எதுவும் நேரவில்லை.

அதிஷ்டம் இருக்கவில்லை. அவர்களுடைய வட்டாரம் கடுமையாக சுற்றிவளைக்கப்பட்டு, அவர்கள் வீடுகளுக்குள் வெறிகொண்டு படையினர் நுழைந்தார்கள். அந்த குடும்பம் புகலிடம் வழங்கியதற்கு ஆதாரம் தேடினார்கள். அந்த வீட்டாரின் இளம் வயது மகனே படையினரின் தாக்குதலுக்கு முதலில் இலக்காவார் என்ற எதிர்பார்ப்பில், படையினர் வீட்டுக்குள் வருவதற்கு முன்னதாக அந்த இளைஞனை ஒளித்துக் கொள்ளுமாறு அவருடைய பெற்றோர் அனுப்பிவிட்டார்கள். அவர் அங்கிருந்து தப்பியோடியமையால் கைது செய்யப்படவில்லை. பெண்களையும் வீட்டையும் காப்பற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு தந்தை வீட்டில் இருந்திருக்கிறார். படையினர் வீட்டை முற்றுகை இட்டபோது அவரே பழிவாங்கப்பட்டார். நாம் தரித்திருந்ததற்கு எந்தவித ஆதாரத்தையும் வீட்டுத் தேடலில் பெறமுடியாததால் தங்கள் ஆத்திரத்தையும் எரிச்சலையும் வீட்டுச் சொந்தக்காரர் மீதே படையினர் கட்டவிழ்த்து விட்டனர். அங்கேயே அவரைக் கடுமையாகத் தாக்கிவிட்டு அண்மையில் இருந்த படைமுகாமுக்கு அவரை நடத்திச் சென்று அங்கே சித்திரவதை செய்திருக்கிறார்கள். குற்றமற்ற அந்த மனிதர் தடுப்புக்காவலில் இடப்பட்டு ஆறு மாதம் கழித்தே விடுதலை செய்யப்பட்டார். இரண்டு பெண்களால் தலைமை தாங்கி நடத்தப்படுவது பற்றி முன்னரே குறிப்பிட்ட மூன்று பிள்ளைகள் உள்ள பரம்பரை வீட்டையும் படையினர் முற்றுகை இட்டிருக்கிறார்கள். அந்தப் பெண்கள் எத்தகைய பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதை என்னால் என்றுமே அறிந்து கொள்ளமுடியவில்லை. ஆரம்பகாலத்தில் காயம் அடைந்த போராளிகளுடன் நாம் தங்கியிருந்த கலட்டி வீடு இந்திய இராணுவ முகாமாக மாறியிருந்தது. வடமராட்சி முழுவதும் இதுவே நடந்தது. எமது பாதுகாப்பான வீடுகளில் ஒன்று தவிர ஏனைய அனைத்தும் ஒன்றில் ஆக்கிரமிக்கப்பட்டன அல்லது தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# புலம்பெயர் சுவிஸ் தமிழ் உறவுகள் தென்னிலங்கை மக்களுக்கு உதவி!







புங்குடுதீவு தாயகம் அமைப்பின் சுவிஸ் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில், பாதிக்கப்பட்ட தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட உதவி , இரத்தின புரியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இருமாதங்களுக்கு முன்னர் இலங்கையின் மலையகம், களுத்துறை, இரத்தினபுரி, காலி, அம்பாந்தோட்டை உட்பட தென்னிலங்கை எங்கும் ஏற்பட்ட மழை, வெள்ளம் அனர்த்தங்களால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சிலதமிழ் உறவுகள்தந்த பொருள்களை புங்குடுதீவு தாயகம் சமூக சேவை அகம் அமைப்பின் சுவிஸ் பிரதிநிதிகள் பொறுப்பேற்றனர்.

இந்தப் பொருள்களை சுவிஸ் பேர்ன் மாநில, கும்லிங்கன் பகுதியில் உள்ள சிலோவா வைத்தியசாலையில் (SILOHA Spital, Gumlingen) தொழில் புரியும் அ.கைலாசநாதன் (குழந்தை), அங்குள்ள நிர்வாகத்திடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அந்த சிலோவா வைத்தியசாலை நிர்வாகம் தந்த பொருள்களுடன், மேலும் சில தமிழ் உறவுகளும் தந்த பொருள்கள் அனைத்தும், சுவிஸில் உள்ள சூரிச் பௌத்த விகாரை பீடாதிபதி வணக்கத்துக்குரிய கருவெலகஸ்வெவ அனுருத்த தேரோவின் உதவியுடன் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

புங்குடுதீவு ''தாயகம் சமூக சேவை அகம்'' அமைப்பின் சுவிஸ் பிரதிநிதிகள், நண்பர்களின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட உதவிகள் கடந்த வியாழக்கிழமை இரத்தினபுரி பகுதியில் வைத்து பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்டன.

இது குறித்து, சூரிச் பௌத்த விகாரை பீடாதிபதி வணக்கத்துக்குரிய கரு வெலகஸ்வெவ அனுருத்த தேரோர் கருத்துத் தெரிவிக்கையில்:-

''நாம் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வந்து இங்கு வாழ்ந்தாலும், தமிழ் சிங்களம் என்ற வேறுபாடு இன்றி, புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித நேயத்துடன் உதவி புரிந்த அனைத்து தமிழ் மக்களுக்கும், இதனை ஏற்பாடு செய்த அமைப்பின் (தாயகம் -புங்குடுதீவு) பிரதிநிதிகளுக்கும், தமது நன்றிகளால் கூறும் அதேசமயம், இவர் களுக்கு புத்தபெருமானின் ஆசி கிடைக்க, தாம் பிரார்த்திப்பதாகவும், மேற்படி உதவிகளை பெற்றுக் கொண்ட மக்கள் மிக மனம் மகிழ்கின்றனர் எனவும், அவர்களின் அன்பையும் பகிர்ந்து கொள்வதாகத் தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும், புங்குடுதீவு தாயகம்சமூக சேவை அகம் அமைப்பின் சார்பில், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, செட்டிகுளம் மற்றும்

## இரத்தினபுரியில் பொருள்கள் பகிர்ந்தளிப்பு

புங்குடுதீவு வைத்தியசாலைக்கு புங்குடுதீவு உற வுகளின் (குழந்தை, குமார், தயா, பன்னீர், அன்பு) உதவியுடன், எம்மால் முடிந்த உதவிகளை வழங்கி இருந்தோம்.

இப்போது தென்னிலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தையும் தொடர்ந்து புங்குடுதீவு தாயகம் சமூக சேவை அகம் அமைப்பின் சார்பில், எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றி..

அத்துடன், சுவிஸில் உள்ள சூரிச் பௌத்த விகாரை பீடாதிபதியுடன் தொடர்பை ஏற்படுத்தித் தந்து உதவிய அஜீவனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று புங்குடுதீவு தாயகம் சமூக சேவை அகம் அமைப்பின் செயலாளர் செல்வி. ஜெகநந்தினி முத்துக்குமார் தெரிவித்திருக்கின்றார்.

(இ)

# யானை - மனித மோதல்களால் இலங்கையில் மரணிக்கும் யானைகள்

> 2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருடங்களில் 1,171 யானைகள் இறந்துள்ளன. அவற்றில் 104 யானைகள் மட்டும்தான் இயற்கையாக மரணமடைந்துள்ளன.

இலங்கையில் யானை - மனித மோதல்கள் உள்ளடங்கலாக பல்வேறு காரணங்களால் ஆண்டு தோறும் இருநூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யானை - மனித மோதல்களின் பின்புலத்தில் துப்பாக்கிச் சூடு, நஞ்சூட்டல், மின்சாரத் தாக்குதல், பொறி துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட மனித செயற்பாடுகளால் கொல்லப்ப டும் யானைகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பைக் காண முடிகின்றது.

65 சதவீதமான யானைகளின் மரணங்கள் துப்பாக்கிச் சூடு மரணங்கள் என பதிவாகியுள்ளன எனக் கூறுகிறார் வன ஜீவராசிகள் துறை இயக்குநர் நாயகம் எம்.ஜி.சி. சூரிய பண்டார.

''துப்பாக்கிச் சூடு பட்ட யானையை இலகுவில் அடையாளம் காண முடியாது. அதன் சோர்வடைந்த நிலை, காலை நொண்டியவாறு நீர் நிலைகளை நோக்கி செல்லல் ஆகிய அறிகுறிகள் அவதானிக்கப் பட்டுத்தான் அவை அடையாளம் காணப்படுகின்றன. யானை அடையாளம் காணப்படும் வேளை அவை மோசமான தொற்றுக்குள்ளாகியிருக்கும்'' என வன விலங்கு சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் தாரக பிரசாத் தெரிவிக்கின்றார்.

### இலங்கையில் யானை - மனித மோதல்கள்

இலங்கையில் இறுதியாக 2011 ஆம் ஆண்டு யானைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது 5,800 யானைகள் உள்நாட்டில் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.






அதன் பின்னரான ஆய்வுகளின்படி, வருடமொன்றுக்கு 80 முதல் 110 யானைகள் வரை பிறந்துள்ள போதிலும், 205 - 280 யானைகள் மரணமடைகின்றன எனக் கூறப்படுகின்றது.

யானைகளை கொல்வது தண்டணைக் குரிய குற்றமாகும். குற்றம் நீதிமன்றத்தில் உறுதிப் படுத்தப்பட்டால் 2 லட்சம் முதல் 5 லட்சம் ரூபா வரை அபராதம் செலுத்த நேரிடும். அல்லது 2 முதல் 5 வருடங் கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என வன ஜீவராசிகள் பாதுகாப்பு சட்டம் கூறுகின்றது.

சட்டத்தில் அவ்வாறு கூறப்பட்டாலும் ஆண்டுதோறும் 200 இற்கும் மேற்பட்ட யானைகள் கொல்லப்படுகின்றன என வன ஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

குறிப்பாக 2012 முதல் 2016-ம் ஆண்டு வரையிலான ஐந்து வருடங்களில் 1,171 யானைகள் இறந்துள்ளன. அவற்றில் 104 யானைகள் மட்டும்தான் இயற்கையாக மரணமடைந்துள்ளன. 1,067 யானைகள் விபத்துகள், யானை - மனித மோதல்கள் உள்ளிட்ட காரணங்களால் கொல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

குறிப்பிட்ட 5 வருட காலத்தில், கடந்த ஆண்டிலே கூடுதலான யானைகளின் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. 35 இயற்கை மரணங்கள் அடங்கலாக 279 யானை மரணங்கள் பதிவாகியுள்ளன.

★

# மங்களவின் மங்களகரமான பட்ஜெட்டை அனைவரும் ஆர்வத்துடன் எதிர்பாருங்கள்!



## கூறுகிறார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ

நிதிஅமைச்சர் மங்கள சமரவீரவின் மங்களகரமான வரவு - செலவுத் திட்டம் பல நிவாரணங்களைக் கொண்டதாக அமையும். ஆகவே, அமைச்சர் மங்களவின் மங்களகரமான பட்ஜெட்டை மக்கள் ஆர்வத்துடன் எதிர்பாருங்கள் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நல்லாட்சி அரசால் வீடமைப்பு திட்டத்திற்கு பெருமளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. வீடமைப்பு செயற்பாடுகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும், முன்னைய ஆட்சியின் போது வீடுகள் நிர்மாணிப்பதற்கு எந்தவொரு வேலைத் திட்டமும் இருக்கவில்லை. மக்களின் பணமும் உடைமைகளும் பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் அப்பாவி மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப முன்னைய ஆட்சியினருக்கு எந்தவொரு கொள்கையும் திட்டமும் இருக்கவில்லை.

என்றாலும், தன்னுடைய குடும்பத்தினருக்கு மாத்திரம் வீடுகளும் சொகுசான வாழ்க்கையும் பெற்றுக் கொடுத்தனர். ஆனால், அப்பாவி மக்கள் வீதிகளில் துன்பப்பட்டனர்.

எனினும், நல்லாட்சி அரசு வந்தபின் வீடமைப்பு துறையை பலப்படுத்தி வாழ்வதற்கு வசதியில்லாமல் வாடும் மக்களுக்கு நிவாரணங்களையும் பெற்றுக்கொடுத்து வீடுகளையும் வழங்கி வருகின்றோம்.

எனினும், எமது இரு வருட ஆட்சியை இருள் சூழ்ந்தது என கூறுகின்றனர். எனினும் முன்னைய பத்து வருடங்களே இருள்சூழ்ந்தகாலம் என்பதனை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

அத்துடன், அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத்திட்டத்தில் வீடமைப்பு துறைக்கு மங்கள சமரவீர முக்கியத்துவம் வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றேன். நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மங்களகரமான வரவு - செலவுத் திட்டம் பல நிவாரணங்களை கொண்டதாக அமையும்.

மேலும், முன்பு நாட்டின் வளங்களை மோசடி செய்த அரசியல்வாதிகளுக்கு பாடமாக அமையும். ஆகவே, அமைச்சர் மங்களவின் மங்களகரமான பட்ஜெட்டை மக்கள் ஆர்வத்துடன் எதிர்பாருங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாகாண சபைத் தேர்தலை பிற்போட வேண்டாம்!

## மார்ச் 12 அமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 24

புதிய அரசமைப்புத் திருத்தம் ஒன்றை முன்வைக்கும் சாட்டில் மாகாண சபைத் தேர்தலை பிற்போட வேண்டாம் என்று மார்ச் 12 அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயகம் மற்றும் நீதியான தேர்தல் என்பவற்றை இலக்காகக் கொண்ட சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பான மார்ச் 12 அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்போது, மார்ச் 12 அமைப்பின் அங்கத்துவ இயக்கமான பல்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தவை வருமாறு:-

அரசு புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தை முன்வைத்து மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதாயின் அதனை அடுத்த தேர்தல் தொடக்கம் நடைமுறைப்படுத்துங்கள். அதற்குப் பதிலாக ஒக்ரோபரில் பதவிக் காலம் நிறைவடையும் மாகாண சபைகளின் தேர்தலை பிற்போட வேண்டாம்.

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் கடந்த நான்கு வருடமாக கட்டம் கட்டமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் செயற்பட முடியாத நிலையில் ஏராளமான அரசியல் நெருக்கடிகள் தலைதூக்கியுள்ளன.

மாகாண சபைகளின் தேர்தல்களையும் பிற்போட்டு அவ்வாறான நிலையொன்றை உருவாக்க வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஆலய திருப்பணி ஆரம்பம்

வேலணை, ஓக.24

வேலணை சிற்பனை முருகன் ஆலயத்தில் நவதள இராஜகோபுர திருப்பணி நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரையும் உள்ள சுபநேரத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த ஆலயத்தில் 108 அடி உயரத்தில் இந்த நவதள இராஜகோபுரம் அமைப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாடாளுமன்றில் எம்.பிக்களின் மேசைகளில் நேற்றுமுன்தினம் முதல் மடிக்கணினிகள்!

கொழும்பு ஓக. 24

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சபைக்குள் பயன்படுத்துவதற்காக இணைய வசதிகளுடன் கூடிய மடிக்கணினிகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் மாதத்துக்குரிய இறுதி வார நாடாளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதன் போது சபையிலுள்ள உறுப்பினர்களின் மேசைகளில் மடிக் கணினிகள் பொருத்தப்பட்டிருந்தன.

சீனாவால் இலங்கைக்கு அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ள கணினிகள் கடந்த 31 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் உரிய ஏற்பாடுகளின் பின்னரே அவை அவைக்குள் பொருத்தப்பட்டு நேற்று முன்தினம் முதல் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது ஆண்டு முன்னேற்ற அறிக்கைகள், ஆவணங்கள் உள்ளிட்டவை இறுவட்டாகவே வழங்கப்படுகின்றன. அதை உடன்பார்க்கக் கூடிய வசதி இருக்கவில்லை.


எனினும், கணினிகள் பொருத்தப்பட்டுள்ளதால் அதனை சபையில் இருந்தவாறே அவர்களால் பார்க்கக் கூடியதாக இருந்தது.

அத்துடன், விவாதத்துக்குத் தேவையான தரவுகளையும் உடனுக்குடன் தேடுவதற்குரிய வசதியும் கிடைத்துள்ளது.

அதேவேளை, நாடாளுமன்ற அமர்வுகளின் போது, உறுப்பினர்கள் நீண்டநேரம் சபையில் அமர்ந்திருப்பதற்கும் இந்தத்திட்டம் உதவியாக இருக்குமென நம்பப்படுகிறது.

கணினிகளை வழங்கிய சீன அரசுக்கு சபாநாயகர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார். இலங்கை நாடாளுமன்றத்தில் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# மகா கும்பாபிஷேகம்



ஊர்காவற்றுறை, ஓக.24

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (இ)

# சர்வதேச உளவியல் மாநாடு: சனியன்று கொழும்பில் ஆரம்பம்!

கொழும்பு ஓக. 24

கொழும்பு ஆராய்ச்சி மற்றும் உளவியல் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை சர்வதேச பயன்பாட்டு உளவியல் மாநாடு நாளை மறுதினம் சனிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகின்றது.

உலகப் புகழ்பெற்ற உளவியலாளரும் நேர்மறை உளவியலின் தந்தையுமான பேராசிரியர் மார்டின் செலிங்மன் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றார்.

ஐ-கெப் இலங்கை - 2017 சர்வதேச பயன்பாட்டு உளவியல் மாநாடு இந்த வாரம் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறும். இந்த மாநாடு எதிர்வரும் 26,27,28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அத்துடன், சர்வதேச நாடுகளின் உளவியல் சார் பேராசிரியர்கள், தத்துவ ஞானிகள், விசேட வைத்தியர்கள் மற்றும் சுகாதார அமைச்சிலிருந்து அதிகாரிகள், உளவியலாளர்கள், உளவியல் தொழில்சார் நபர்கள், சமூக உளவியலாளர்கள், அரசு தொடர்புடைய பிரதிநிதிகள், தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் இந் நிகழ்வில் கலந்துகொள்கின்றனர்.

பேராசிரியர் மார்டின் செலிங்மன் 1964 ஆம் ஆண்டு பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

1967 ஆம் ஆண்டு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி கற்கையை முடித்தார். 1998 ஆம் ஆண்டு அவர் அமெரிக்க உளவியலாளர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் 250இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் மற்றும் உண்மையான மகிழ்ச்சி, அசாதாரண உளவியல், ஆர்ட்டிமிஸ்டிக் குழந்தைகள் போன்ற தலைப்புகளில் 20 இற்கும் மேற்பட்ட சுய உதவி புத்தகங்களை எழுதியுள்ளார்.

இவருடைய நூல்கள் பதினொரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, அமெரிக்க மற்றும் பல்வேறு நாடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், இவர் குறிப்பிட்ட சில காலமாக அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியுள்ளார். அமெரிக்க இராணுவத்தின் இராணுவ வீரர்களிடையே உளவியல் ரீதியான மீள்வரவை உருவாக்குவதற்கான அரும்பெரும் கடமையையும் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

காலைக்கதிர் Kalaikkathir



## இரண்டாம் கல்யாணத்திற்கு தடையாக இருந்த மகளை கொன்ற தந்தை கைது

புதுடில்லி, ஓக.24

மனைவி இறந்ததற்கு பின் இரண்டாவது கல்யாணத்திற்கு தடையாக இருந்த மகளை கழுத்தை நெரித்துகொன்றதந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுடில்லியில் சிறுமி கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த தரம்பீர் (வயது 28) மற்றும் அவரது உறவினர் சஞ்சய் (வயது 19) ஆகியோர்நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸ் துணை கண்காணிப்பாளர் எம்.என்.திவாரி கூறுகையில்- தரம்பீரின் மனைவி கடந்த ஜூன் மாதம் உடல் நிலை சரியில்லாமல் உயிரிழந்தார். அவரின் இறப்பிற்கு பின் தரம் பீர் தனது உறவுக்காரப் பெண் ஒருவரிடம் நெருக்கமாக இருந்துள்ளார். அவரைத் திருமணம் செய்து கொள்ள எண்ணியுள்ளார். அதற்கு அந்த பெண், தரம்பீரிடம் குழந்தைகளை எங்கேயாவது விட்டுவிட்டு வந்தால் மட்டுமே திருமணம் செய்து கொள்வதாகக் கூறியுள்ளார்.

இதனால், தனது இரண்டாவது திருமணத்திற்கு தடையாக இருந்த தனது மகளை கொல்ல தனது உறவினர் சஞ்சய் என்பவருடன் இணைந்து திட்டம் தீட்டியுள்ளார்.

அதன்படிகடந்தஜூலை மாதம் 17ஆம் திகதி மகளை கழுத்தை நெரித்துக் கொன்றுள்ளார். பின்னர் யாருக்கும் சந்தேகம் வரா மல் இருக்க மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், பிரேத பரிசோதனையின் போது குழந்தை கழுத்து நெரித்துக்கொல்லப்பட்டமைகண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து பொலிஸ் நடத்திய விசாரணையில் தரம்பீர் கொலை செய்தமை தெரிய வந்தது. தரம்பீரையும் அவரது உறவினர் சஞ்சயையும் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

# எடப்பாடி ஆட்சி கவிழ்ந்தே தீரும்; எவராலும் தடுக்க முடியாது!

## ஆவேசத்துடன் புகழேந்தி சூளுரை

பெங்களூர்.ஓக.24

சசிகலாவைத் தொடர்ந்து விமர்சித்தால் எடப்பாடி பழனிசாமி ஆட்சி கவிழ்வதை எவராலும் தடுக்க முடியாது என்று கர்நாடக மாநில அ.தி.மு.க. அம்மா அணி செயலாளர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநில அ.தி.மு.க. அம்மா அணி செயலாளரும், செய்திதொடர்பாளருமான புகழேந்தி நேற்று செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

முற்பகல் 10 மணி முதல் 2 மணி வரை எடப்பாடி பழனிச்சாமியும், பகல் 2 மணி முதல் 6 மணி வரை ஓ.பன்னீர் செல்வமும் முதல் அமைச்சர்களாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்கு இரண்டு முதல் அமைச்சர்கள் இருக்கிறார்கள். சசிகலா சிறைக்கு சென்றமை முதல் அவர் சிறையிலேயே முடங்கிக் கிடக்கின்றார்.

அவர் பா.ஜனதாவுக்கு எதிராகச் செயற்பட்டாரா அல்லது எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராகச்செயல்பட்டாரா? அல்லது அவர் யாரையாவது விமர்சித்தாரா என்றால் இல்லை. பின்னர் ஏன் அவரது பெயரைத் தேவை இல்லாமல் இழுக்கிறீர்கள். ஏன் தொடர்ந்து அவரை விமர்சித்து வருகின்றீர்கள்.

பெங்களூர் சிறைத்துறை அதிகாரி ரூபாவை யாரோ மறைமுகமாகத் தூண்டி விடுகிறார்கள். சசிகலா யாருக்கு என்ன பாவம்செய்தார். அவரைசிறைக்கு அனுப்பி விட்டு அவரை தொடர்ந்து துன்புறுத்தி வருகிறீர்களே ஏன்? உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா?

கட்சி பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட அவர்வழக்கின் தீர்ப்பு தொடர்பாக சிறைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் சிறையில் எதைப்பற்றியும் யோசிக்காமல் உள்ளார். அவரை கட்சியை விட்டு நீக்குவதாக வைத்திலிங்கம் அறிவிக்கிறார். இது பற்றி எடப்பாடி பழனிச்சாமி இதுவரை வாய் திறக்காதது ஏன்? அவர் மௌனமாக இருப்பது ஏன்? இனிமேலும் தினகரன் அமைதியாக இருக்க மாட்டார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வர அனைத்து தகுதிகளும் அவருக்கு இருக்கிறது. அவர் நம்பிக்கையில்லாப் பிரேரணை தீர்மானம் கொண்டுவந்தால் அதன் பிறகு தினகரனின் முகம் தெரியவரும்.

தினகரனின் முதல் முகத்தை ஏற்கனவே பார்த்தீர்கள். தற்போது எம்.எல்.ஏ.க்களின் செயற்பாடுகள் மூலம் அவரது



இரண்டாவது முகத்தை பார்த்து வருகிறீர்கள். நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்டசபையில் தி.மு.க. கொண்டு வரும் போது அவரது மூன்றாவது முகத்தை விரைவில் பார்ப்பீர்கள்.

அப்போது ஆட்சி இருக்குமா என்பதைப் பார்ப்பீர்கள். ஆட்சியை விடகட்சிதான் எங்களுக்கு முக்கியம் என்ற முடிவுக்கு நாங்கள் வந்து விட்டோம். இதனால் எடப்பாடி தலைமையிலான ஆட்சி கவிழ்வதை எவராலும் தடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

### உத்தரப்பிரதேசத்தில் 70 குழந்தைகள் சாவு:

# ஆஸ்பத்திரி முன்னாள் பணிப்பாளர் உட்பட 6 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

முதலமைச்சர் உத்தரவு



லக்னோ, ஓக.24

உத்தரப்பிரதேசத்தில் 70 குழந்தைகள் பலியான சம்பவம் தொடர்பாக கோராக்பூர் மருத்துவமனை முன்னாள் முதல்வர் உள்ளிட்ட 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்ய முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் கோராக்பூர் மாவட்டத்தில் உள்ள அரசுமருத்துவமனையில் அடுத்தடுத்து ஒரே வாரத்தில் 70 குழந்தைகள் ஒட்சிசன் பற்றாக்குறையால் உயிரிழந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. இருப்பினும் இதற்கு ஒட்சிசன் பற்றாக்குறை காரணம் காரணமல்ல என்று யோகி ஆதித்யநாத் தலை மையிலான அரசு கூறி வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக்கு உத்தரவிட்ட உத்தரப்பிரதேச அரசு, மருத்துவ மனை முதல்வர் மிஸ்ராவை பதவி நீக்கம்செய்தது. அதே போல், கோராக்பூர் மருத்துவ மனையில் பணியாற்றி வந்த குழந்தைகள் சிறப்பு மருத்துவரான கபீல் கான் என்பவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதனையடுத்து, இந்த சம்பவம் தொடர்பாக முதன்மை செயலாளர் ராஜீவ் குமார் தலைமையிலான உயர்மட்ட குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது அறிக்கையை தாக்கல் செய்தது.

இந்நிலையில், 70 குழந்தைகள் பலியான சம்பவம் தொடர்பாக கோராக்பூர் மருத்துவமனை முன்னாள் முதல்வர் மிஸ்ரா உள்ளிட்ட 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்ய முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், உரிய நேரத்தில் ஒட்சிசன் சிலிண்டருக்கான பணம் செலுத்தாத மருத்துவக் கல்விக்கான கூடுதல் முதன்மை செயலாளர் அனிதா பாட்நகரை நீக்கவும் முதல்வர் உத்தரவிட்டார்.

லக்னோ நகரில் உள்ள ஹஜ்ரட்கஞ்ச் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பாகிஸ்தானுக்கு கண்டிப்பு: ட்ரம்ப் பேச்சுக்கு இந்தியா வரவேற்பு

புதுடில்லி, ஓக.24

தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதாககூறி பாகிஸ்தானை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கண்டித்துள்ளதற்கு இந்தியா வரவேற்பு அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அந்த நாட்டு மக்களுக்கு செய்தி விடுத்து நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் பேசினார். அப்போது அவர் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளிப்பது குறித்து குறிப்பிட்டுக் கடுமையாக எச்சரித்தார். ஆப்கானிஸ்தானில் ஸ்திரத்தன்மை ஏற்படுவதற்கு இந்தியா ஆற்றி வருகிற பங்களிப்பை பாராட்டியிருந்தார்.

ட்ரம்பின் இந்தக் கருத்துக்களை இந்தியா வரவேற்றுள்ளது.

இது குறித்து வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ் குமார் கூறுகையில்-

இந்த கவலைகளை, நோக்கங்களை இந்தியா பகிர்ந்து கொள்கிறது. ஆப்கானிஸ்தானில் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, வளம் ஆகியவற்றை கொண்டு வருவதில் அந்த நாட்டின் அரசுக்கும், மக்களுக்கும் இந்தியா ஆதரவு அளிப்பதில் உறுதியாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையே ட்ரம்ப், பாகிஸ்தானை கண்டித்துள்ள நிலையில், அந்த நாட்டுக்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுபற்றி சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஹூவா சுன்யிங் கூறுகையில்- பயங்கரவாதத்துக்கு எதிராக முன்வரிசையில் நின்று பாகிஸ்தான் போராடுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.



பீகாரில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 341 ஆக உயர்ந்துள்ளது.

# பீகாரில் வெள்ளம்: சாவு 341 ஆக உயர்வு

பீகார் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் அங்குள்ள ஆறுகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து வருகின்றனர்.

இதற்கிடையே, தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பீகாரில் இதுவரை 341 பேர் பலியாகி உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பீகாரின் 18 மாவட்டங்கள் கடுமையாக பாதிப்பு அடைந்துள்ளன. சுமார் 98 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதேபோல், உத்தரப்பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 86 பேர் பலியாகி உள்ளனர். இருமாநிலங்களிலும் பல லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெ.போர் விமானங்கள் சிரியாவில் குண்டு மழை!



**19 குழந்தைகள் உட்பட 42 பேர் சாவு**

டமாஸ்கஸ்,ஓக.24

சிரியாவின் ரக்கா நகரில் முகாமிட்டுள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகளை குறிவைத்து அமெரிக்க போர்விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 19 குழந்தைகள், 12 பெண்கள் உட்பட 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த சில ஆண்டுகளாக ஆயுதப் புரட்சி நடந்து வருகின்றது. அரசுப் படைகள் மற்றும் போராளி குழுக்களுக்கு இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் சுமார் 3 லட்சம் மக்கள் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையில், சிரியாவின் சில முக்கிய நகரங்களை ஆக்கிரமித்த ஐ.எஸ்.தீவிரவாதிகள் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களைத் தீர்த்துகட்டும் பணியில் அரசுப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ரஷ்யா நாடுகளின் விமானப் படைகள் அவ்வப்போது வான்வழி தாக்குதலில் ஈடுபடுகின்றன.

இந்நிலையில், ரக்கா நகரில் முகாமிட்டுள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகளைக் குறிவைத்து அந்நகரின் அமெரிக்க போர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

இரண்டாம் நாளாக நடைபெற்ற இந்தத் தாக்குதலில் ரக்கா நகரை ஒட்டியுள்ள பகுதியைச்சேர்ந்த 19 குழந்தைகள், 12 பெண்கள் உட்பட 42 பேர் உயிரிழந்தனர் என சிரியா போர் நிலைவரங்களைகண்காணித்து வரும் நடுநிலையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப)



## விடுமுறைச் செலவு 650 கோடி ரூபா!

மொராக்கோ நாட்டில் விடுமுறையை கழிக்க சவுதி மன்னர் 650 கோடி ரூபா (100மில்லியன் டொலர்) செலவு செய்தார். அது சவுதி அரேபியாவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

மொராக்கோ வந்து இறங்கிய மன்னரை அந்நாட்டு பிரதமர் சதேதின் ஆத்மானி விமான நிலையம் வந்து வரவேற்றார். மேலும் பாதுகாப்புக்காக மொராக்கோவின் 30 பேர் கொண்ட சிறப்பு படையும் வழங்கப்பட்டது.

மொராக்கோ நாட்டில் மன்னர் சல்மான் தங்கியிருந்த போது 650 கோடி ரூபா(100மில்லியன் டொலர்) செலவு செய்யப்பட்டது. அது சவுதி அரேபியாவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

போகாதே...! முன்னால் போகாதே...!

## கணவரின் சொற்கேளாத மனைவிக்கு விவாகரத்து

சவூதி அரேபியாவில் நடந்து செல்லும் போது கணவரின் பேச்சைக் கேட்காமல் முன்னால் நடந்து சென்றமையால் விவகாரத்து வழங்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சவூதியில் சிறிய காரணங்களுக்காக விவாகரத்து கொடுப்பவர்களின் எண்ணிக்கைஅதிகரித்து கொண்டே போகிறது. அந்த வரிசையில் மனைவியின் சிறிய செயலுக்காக கணவன் விவாகரத்து கொடுத்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

கணவன் - மனைவி இருவரும் நடந்து சென்று கொண்டிருக்கும் போது மனைவி கணவனுக்கு முன்னால் நடந்த சென்றார் எனக் கூறப்படுகிறது.

முன்னால் நடந்து செல்லக் கூடாது என கணவன் பல தடவை எச்சரித்தும் அப் பெண் நிற்காமல் நடந்து சென்றுள்ளார். இதனால் கோபமடைந்த கணவன் விவாகரத்து வழங்க முடிவு செய்து மனைவிக்கு விவாகரத்து வழங்கியுள்ளான்.

இதே போன்று பல சம்பவங்கள் சவூதி அரேபியாவில் அரங்கேறி வருகின்றன. மனைவி இரவு உணவின் போது ஆட்டின் தலையை பரிமாறாத காரணத்திற்காக கணவன் விவாகரத்து வழங்கியுள்ளான்.

# பாகிஸ்தானில் கனமழை!

இஸ்லாமாபாத்.ஓக.24

பாகிஸ்தானில் பெய்த கனமழையால் கராச்சியில் கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 24 பேர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை முதல் கனமழை பெய்து வருகின்றது. இதனால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும் வீடுகளில் வெள்ள நீர் புகுந்ததால் மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தால் பாகிஸ்தானில் உள்ள சித் மாகாணத்தின் தலைநகரான கராச்சி நகரில் மட்டும் 24 பேர் பலியாகினர். அவர்கள் மின்சாரம் தாக்கியும், வெள்ளத்தில் மூழ்கியும் மற்றும் வீட்டின் இடிபாடுகளில் சிக்கியும் இறந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழையால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.



**இரண்டு நாளில் 24 பேர் சாவு**

இதனால் மக்கள் இரண்டு நாள்களாக இருட்டில் இருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மின்சாரம் இல்லாத நிலையில், தண்ணீர் வசதியும் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கராச்சி மற்றும் பாகிஸ்தானின் மற்ற பகுதிகளிலும் மேலும் சில நாள்களுக்கு கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ரொக்கெட், வெடிகுண்டு தயாரிக்க வடகொரிய அதிபர் அதிரடி உத்தரவு!

சமாதான பேச்சின் பக்கம் அமெரிக்கா நெருங்கிவரும் நிலையில் கூடுதலாக ரொக்கெட்கள் மற்றும் வெடிகுண்டுகளை தயாரிக்குமாறு வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார்.

குவாம் தீவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தை அழித்து விடுவோம் என்று மிரட்டிவரும் வடகொரியாவுக்குப் பதில் அளிக்கும் வகையில் அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கைஎடுப்பதற்குத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முன்னர் குறிப்பிட்டிருந்தார். எனினும், பேச்சு மூலம் சமாதானம் ஏற்படும் என நம்புகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




போனிக்ஸில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ட்ரம்ப், வடகொரியா அதிபர் தற்போது அமெரிக்காவை மதிக்கத் தொடங்கியுள்ளார் எனக் குறிப்பிட்டார். எனவே, இருநாடுகளுக்கிடையிலான மோதல்போக்கில் ஒருவேளை சாதகமான மாற்றம் உருவாகலாம் என நம்புகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், வடகொரியா நாட்டில் ரொக்கெட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நேற்று அந்நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன் சென்று பார்வையிட்டார்.

அப்போது கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைகள் மற்றும் திரவ எரிபொருளால் இயங்கும் நவீனரக ரொக்கெட்கள் தயாரிக்கப்படும் தொழில்நுட்பம் குறித்து கிம் ஜாங் உன்-னிடம் அங்குள்ள விஞ்ஞானிகள் விளக்கிக் கூறினர்.

சுமார் ஒரு மணி நேரம் அந்தத் தொழிற்சாலையை பார்வையிட்ட கிம் ஜாங் உன், எரிபொருளால் இயங்கும் நவீனரக ரொக்கெட் என்ஜின்கள் மற்றும் ரொக் கெட்களின் மூக்குப் பகுதியில் இணைக்கப்பட்டு அனுப்பும் ஆபத்தான வெடிகுண்டுகளை அதிக அளவில் தயாரிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

# 700 வீரர்கள் இம்முறை களத்தில்!




## ஒக. 31 இல் ஆரம்பமாகிறது தேசிய மெய்வன்மை சம்பியன் ஷிப் தொடர்

இலங்கை மெய்வன்மைச் சம்மேளனத்தினால் நடத்தப்படுகின்ற வருடத்தின் மிகப் பெரிய போட்டித் தொடரான 96ஆவது தேசிய மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டிகள் இம் மாதம் 31ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 2ஆம் திகதி வரை தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடை பெறவுள்ளன.

இதன்படி இம்முறை போட்டித் தொடரில் 498 வீரர்களும், 202 வீராங்கனைகளுமாக 700 போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் ஆஸ்திரேலியாவின் கோல் கோஸ்ட்டில் நடைபெறவுள்ள 19ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை இலக்காகக் கொண்டு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டித் தொடராகவும் இது அமையவுள்ளது.

எனினும், வருடத்தின் மிகப் பிரதான மெய்வன்மைப் போட்டித் தொடரான தேசிய மெய்வன்மைச் சம்பியன்ஷிப் தொடரில் கடந்த காலங்களைப் போல இவ்வருடமும் தேசிய மட்ட வீரர்களுடன், புதுமுக வீரர்களும் பங்குபற்றவுள்ளனர் என இலங்கை மெய்வன்மைச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அண்மையில் நடைபெற்ற இலங்கை மெய்வன்மைச் சம்மேளன தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தலைமையிலான புதிய நிர்வாகத்தினர், அடுத்த வருடத்துக்கான மெய்வன்மைப் போட்டி அட்டவணையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி, அடுத்த வருடம் மார்ச் மாதம் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை தேசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளை கொழும்பில் அல்லது தியகமவில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள மெய்வன்மைச் சம்மேளனம், எதிர்வரும் மே மாதம் 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டித் தொடரையும் இலங்கையில் நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை ஜப்பானில் ஆசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளும், ஜூலை 10ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை பின்லாந்தில் உலக கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை இந்தோனேஷியாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவைக் கருத்தில் கொண்டு அடுத்த வருடத்துக்கான 97 ஆவது தேசிய மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டிகளை ஜூலை மாதம் 6,7 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடத்தவும் இலங்கை மெய்வன்மைச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

எனவே, அடுத்த வருடம் அதிகளவான சர்வதேசப் போட்டிகளைக் கொண்ட ஆண்டாக இருப்பதால் தேசிய மெய்வன்மைக் குழாமில் இடம்பெறவுள்ள வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டித் தொடர்களாக இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள தேசிய மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டித் தொடரும், அதன்பிறகு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவும் இந்நாட்டு மெய்வன்மை வீரர்களுக்கு முக்கிய தொடராக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவையனைத்துக்கும் மத்தியில் சுகததாஸ மைதானத்தின் செயற்கை ஓடுபாதையின் நிர்மாணப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவடைந்தால் அடுத்த வருடத்திலிருந்து சர்வதேசப் போட்டிகளை இலங்கையில் நடத்துவது குறித்தும் இலங்கை மெய்வன்மைச் சம்மேளனம் அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டோனிக்கு, கம்பீர் கூறும் அறிவுரை!




இந்திய கிரிக்கெட் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட கம்பீர் இணையத்தளத்தில் டோனிக்கு அறிவுரை கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட கம்பீர் இணையத்தளத்துக்கு அளித்த ஒரு பேட்டியில், விக்கெட் காப்பாளர் டோனி, தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே 2019 ஆம் ஆண்டு உலக கோப்பை வரை இந்திய அணியில் நீடிக்க முடியும். எந்த ஒரு வீரராக இருந்தாலும் சரி, அணியில் நீடிக்க இதுதான் தகுதியாக இருக்க வேண்டும்.

முன்பு பல சாதனைகளை படைத்திருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அது முடிந்து போன விடயம். அதை வைத்துக் கொண்டு அணியில் விரும்பும் வரை விளையாடிக்கொண்டிருக்க முடியாது. அதே சமயம் தினேஷ் கார்த்திக் போன்ற வீரர்களுக்கு போதிய வாய்ப்புக் கிடைக்காதமை நமக்கு மிகப்பெரிய இழப்பாகும். தினேஷ் கார்த்திக்கை பொறுத்தவரை கிடைத்த வாய்ப்புகளில் நன்றாக ஆடியிருக்கிறார். அவரை அணியில் 2ஆவது விக்கெட் காப்பாளர் ஆக வைத்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

# பிற்போடப்பட்டது SAFF கிண்ணத் தொடர்

2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி பங்களாதேஷில் ஆரம்பமாகவிருந்த 12ஆவது தெற்காசிய உதைபந்து சம்மேளக் கிண்ண போட்டிகள் (SAFF) 2018 மே மாதம் நடை பெறும் வண்ணம் போட்டி அட்டவணைகள் மாற்றப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள பீபா (FIFA) 17 வயதுக்கு கீழ்ப்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரைக் கருத்தில் கொண்டு இந்திய உதைபந்து சம்மேளனத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் SAFF கிண்ணப் போட்டிகள் அடுத்த வருடத்திற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளன. இப்போட்டிகள் 2018 மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பீபா (FIFA) 17 வயதுக்கு கீழ்ப்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் இடம்பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து இந்தியாவின் 11 அணிகள் பங்கு கொள்ளும் இந்தியன் சுப்பர் லீக் தொடர் இடம்பெறவுள்ளதனாலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம் பெறும் தெற்காசிய உதைபந்தாட்டச் சம்மேளனக் கிண்ணத் தொடர் எதிர்வரும் 2018 மே மாதத்திற்கு தள்ளி வைக்கப்படுகின்றது என தெற்காசிய உதைபந்தாட்டச் சம்மேளனம் அறிவித்திருந்தது.



இந்திய உதைபந்தாட்ட சம்மேளனம் தமது ஊடக அறிக்கையில் தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பரிந்துரைப்பின்படி தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ணத் தொடரை 2018 மே மாதம் பங்காளதேஷில் நடத்துவதற்கு தமது செயற்குழு ஒப்புதல் அளித்ததாக தெரிவித்தது.

கடந்த முறை 2015 டிசெம்பர் - 2016 ஜனவரி காலப்பகுதிகளில் இடம்பெற்ற தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ண தொடர் சம்பியனான அணியாகக் கருதப்படும் இந்தியாவின் வேண்டுகோளை அடுத்தே தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயற்குழுவால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அன்வருல் ஹக் ஹேலால் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் சர்வதேச மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் உதைபந்தாட்டப் போட்டிகளில் தொடர்ந்து இறுக்கமான கால அட்டவணையைக் கொண்டிருக்கும் இந்திய அணி இல்லாது தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ணத் தொடரை நடத்த முடியாது. அதனால் இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த தொடர் அடுத்த வருடம் இந்தியன் சுப்பர் லீக் தொடரைத் தொடர்ந்து மே மாதம் முதலாம் திகதி முதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக பாகிஸ்தான் அணி எந்தவிதமான சர்வதேசப் போட்டிகளிலும் பங்கு கொள்ளாத நிலையில் இப்போட்டிகளில் பங்கு கொள்ளுமாறு ஆப்கானிஸ்தான் அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனால் தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ணத் தொடரில் பங்கு கொள்ளும் அணிகளின் எண்ணிக்கை தொடர்பில் உறுதியான தகவல் எதனையும் தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளன செயலகம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ணத் தொடரில் பங்கு கொள்ளும் அணிகளின் எண்ணிக்கை தொடர்பாக எமது அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளோம். உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக பாகிஸ்தான் அணி எந்த விதமான வயதுப் பிரிவுகளிலும் பங்கு கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ள நிலையில் ஆப்கானிஸ்தான் அணிக்கு மீண்டும் அழைப்பு விடுப்பதா என அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

மேலும், அனுசரணையாளர்கள் 8 அணிகளுக்கு மட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என அன்வருல் ஹக் ஹேலால் தெரிவித்தார்.

# எங்களைத் தனியாக விட்டு விடுங்கள்! அணியை உறுதியாக்குவோம்!!

## நிக்போத்தாஸ் கூறுகிறார்



இலங்கை கிரிக்கெட் அணியை மீள எழுச்சி பெறச் செய்யும் தனது முயற்சியை பலரின் தலையீடுகள் பாதிக்கின்றன. எங்களைத் தனியாக விடுங்கள் அணியை உறுதியாக்கிக் காட்டுகின்றோம் என இலங்கைக் கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்றுநர் நிக்போத்தாஸ் தெரிவித்துள்ளார்

இந்தியாவுக்கு எதிராகத் தம்புள்ளவில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை படுதோல்வி அடைந்த பின்னரே அவர் இதனைக் கூறியுள்ளார்

போட்டியின் ஆரம்பக் கட்டத்தில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் இருந்த இலங்கை அணி எஞ்சிய 9 விக்கெட்டுகளை 77 ஓட்டங்களுக்குள் இழந்தது. அத்துடன், ஷிக்கர் தவான், விராட் கோஹ்லி ஆகியோரின் அதிரடியின் பலனாக 9 விக்கெட்டுகளால் இலங்கை தோல்வியைத் தழுவியது.

இந்தத் தோல்வியால் மனம் நொந்துபோன சில இரசிகர்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்திய துடன், இலங்கை அணியினரின் பஸ்ஸூக்கு முன்னால் கூடி தமது எதிர்ப்பையும் வெளியிட்டனர்.

இதனை அடுத்து பொலிஸார் தலையிட்டு இரசிகர்கள் குழுவை அப்புறப்படுத்தியதுடன் இலங்கை அணியினரின் பஸ்ஸையும் வழியனுப்பி வைத்தனர்.

இந்தத் தோல்வி மனதைப் புண்படுத்துவது டன் மனக் குழப்பத்தையும் தோற்றுவிக்கின்றது என போத்தாஸ் கூறினார்.

'இந்தத் தோல்வியால்' ஆத்திரவசப்படுவது இயல்பு. ஆனால், வீரர்கள் மீது நான் ஆத்திரம் கொள்ளவில்லை.

அவர்களிடம் கேட்கப்படும் அளவுக்கு அவர்கள் கடுமையாக உழைக்கின்றனர். அவர்கள் சிறந்தவர்கள். அணியின் உதவியாளர்களும் தங்களாலான சகலதையும் செய்கின்றனர்.

அவர்கள் நேரம், காலம் பாராமல் உழைப்பதுடன் வீரர்களுடன் இணைந்து திட்டங்களையும் வகுக்கின்றனர். வீரர்களின் தங்கும் அறையில் யாரும் தவறிழைக்கவில்லை.

உண்மையில் எம்மால் திறமையை வெளிப்படுத்த முடியாமல் போனது. இதனால் ஆத்திரவசப்படத்தான் செய்வோம். ஆனால், பலரது தலையீடுகள் தான் இதுற்குக் காரணம் என்பதை திட்ட வட்டமாகக் கூறலாம் என்றார் போத்தாஸ்.

தனக்கு உரிய ஆளுகை வழங்கப் பட்டால் அணியின் முன்னேற்றத்திற்கான சரியான கால எல்லையை வரையறுக்க முடியும் எனவும் ஆனால், அதற்கான சூழ் நிலை இங்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அணி மீதான பொறுப்பும் கட்டுப்பாடும் எனக்கு இருந்தால் எம்மால் ஒரு காலவரையறையைகூற முடியும். ஆனால் தொட்டதற்கெல்லாம் மற்றவர்களையும் கேட்கவேண்டியுள்ளது. என்னைப் பொறுத்தமட்டில் எங்களைத் தனியாக விட்டுவிட்டால், இந்த வீரர்களுடன் இணைந்து செயற்பட அனுமதித்தால் அடுத்த ஆறு மாதங்களில் அணியை உறுதியானநிலைக்கு இட்டுச் செல்ல முடியும்.

அத்துடன், திறமையும் தொடரும் என போத்தாஸ் மேலும் தெரிவித்தார். வீரர்கள் உண்மையில் இயல்பாகவே திறமைசாலிகள். அவர்களுக்கு கால அவகாசமும்வழங்குவதுடன் நேசத்தையும் பாசத்தையும் பொழிந்து அவர்கள் மத்தியில்நம்பிக்கையைக் கட்டிஎழுப்பினால்பெறுபேறுகளை விரைவில் காணலாம் என்றார் அவர்.

மேலும், அணியில் தொடர்ச்சியாக இடம்பெறும் மாற்றங்களும் அணியின் திறமையைப் பாதிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அடுத்த வாரம் பங்களாதேஷூடனான டெஸ்ட் தொடரில் மோதும் ஆஸ்திரேலியா




பங்களாதேஸுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலியகிரிக்கெட்அணி, எதிர்வரும் 27 ஆம் திகதி டாக்கா நகரில் ஆரம்பமாகும் போட்டியுடன் அந்நாட்டுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதவுள்ளது.

இத்தொடரில் விளையாடுவதற்காக ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலானஆஸ்திரேலியஅணியினர், கடந்த வெள்ளிக்கிழமை பங்களாதேஸுக்கு சென்றுள்ளனர்.

இந்த டெஸ்ட் தொடருக்காக அறிவிக்கப்பட்டிருக்கும் பங்களாதேஷ் அணியின் தலைவராக முஷ்பிகுர் ரஹீம் செயற்படவுள்ளார். அத்தோடு சகல துறை ஆட்டக்காரர் நஸீர் ஹொஸைன்மற்றும்வேகப்பந்து வீச்சாளர் சபியுல் இஸ்லாம் ஆகியோர் மீண்டும் பங்களாதேஷ் அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் இத்தொடரின் மூலம் விளையாடவுள்ளனர்.

இந்தச் சுற்றுப் பயணத்திற்காக ஆஸ்திரேலிய அணியில் இணைக்கப்பட்டிருக்கும்துடுப் பாட்ட வீரரான உஸ்மான் கவாஜா தனது வழமையான ஆட்டத்தை பங்களாதேஸுடனான தொடரின் மூலம் மீண்டும் பெறுவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இறுதியாக, இந்திய அணியுடன் டெஸ்ட் தொடர் ஒன்றில் விளையாடியிருந்த ஆஸ்திரேலிய அணி, அத்தொடரை 2:1 என பறிகொடுத்திருந்தது. அத்தோல்வியின் காரணமாக, டெஸ்ட் தரவரிசையில் நான்காம் இடத்தில் காணப்படும் ஆஸ்திரேலியாவிற்கு மீண்டும் புள்ளிகளை அதிகரித்து முன்னிலை பெற இத்தொடர் வரப்பிரசாதமாக அமையும்.

எனினும் துடிப்பு மிக்க பங்களாதேஷ் அணி, தமது சொந்த மண்ணில் வைத்து பலமிக்க இங்கிலாந்து அணி யினை கடந்த வருடம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி வரலாற்று வெற்றி ஒன்றைப் பதிவு செய்து இருந்ததுடன், இவ் வருட மார்ச் மாதத்தில் இலங்கை அணிக்கெதிராகவும்டெஸ்ட்போட்டியொன்றில் முதல் தடவையாக வெற்றி பெற்று சாதனை புரிந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 3 இருபதுக்கு 20 போட்டி; பாக். செல்லும் மே.இ.தீவு அணி



2009 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் சென்று விளையாடிய போது மைதானத்துக்கு செல்லும் வழியில் அணி பயணித்த பஸ் மீது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுத் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இதில் இலங்கை வீரர்கள் காயத்துடன் உயிர் தப்பினார்கள்.

அதன் பிறகு பெரிய அணிகள் எதுவும் பாகிஸ்தான் சென்று விளையாடவில்லை. கடந்த 2015ஆம்ஆண்டில்ஸிம்பாப்வே அணி மட்டும் ஒரு முறை சென்று விளையாடியது. எல்லா அணிகளும்செல்லமறுப்பதால் பாகிஸ்தான் அணியின் சர்வதேச போட்டிகள் அனைத்தும் பொதுவான இடமான ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்தப்பட்டு வருகின்றன.

பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேசகிரிக்கெட்போட்டியை நடத்த அந்த நாட்டு கிரிக்கெட் சபை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் ஓர் அங்கமாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உலக லெவன் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 போட்டித் தொடரில்விளையாடசம்மதித்துள்ளது.

அதே மாதத்தில் இலங்கை அணி லாகூரில் ஒரே ஒரு இருபதுக்கு 20 போட்டியில் விளையாடமுடிவுசெய்துள்ளது.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி, எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் பாகிஸ்தான் சென்று 3 இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேதி தெரிவித்துள்ளார்.

# மிக நெருக்கடியான கட்டத்தில் இந்திய – இலங்கை அணிகள் சமர்

## இன்று பல்லேகலையில் 2 ஆவது ஒருநாள் போட்டி

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 2ஆவது ஒருநாள்போட்டி இன்று பல்லேகலேயில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

விராட்கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது.

இரு அணி இடையேயான டெஸ்ட் தொடரை இந்தியா 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டி தொடரில் தம்புள்ளாவில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகளும் மோதும் 2ஆவது ஒருநாள் போட்டி இன்று பல்லேகலேயில் ஆரம்பமாகின்றது. இப்போட்டி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணி துடுப்பாட்ட வரிசையிலும் பந்துவீச்சு வரிசையிலும் பலம் பொருந்தியதாக இருக்கின்றது.

இதனால் இந்தியா சம பலத்துடன் திகழ்கின்றது. இன்றைய ஆட்டத்தில் வென்று 2ஆவது வெற்றியை பதிவு செய்யும் முனைப்பில் இருக்கின்றது. உபுல் தரங்க தலைமையிலான இலங்கை அணி முதல் ஆட்டத்தில் தோற்றதால் வெற்றி நெருக்கடியில் உள்ளது.

அந்த அணியில் டிக்வெல்ல, குணதிலக, குசல் மெண்டிஸ், மத்யூஸ், கப்புகெதர, பெரேரா, மலிங்க, சண்டகன், டிசில்வா போன்ற வீரர்கள் உள்ளனர். முதல் போட்டியில் தொடக்கத்தை சிறப்பாக கண்ட அந்த அணி அதன்பின் விக்கெட்டுகளை மளமளவெனப் பறி கொடுத்தது.

இதனால், துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. முதல் போட்டித்தோல்விக்கு பதிலடி கொடுக்க இலங்கை முயற்சிக்கும். என்றாலும் வலுவான இந்தியாவை வீழ்த்த கடுமையாகப் போராட வேண்டிய நிலையில் இலங்கை அணி காணப்படுகின்றது.

## அரசமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கயந்த கருணாதிலக அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

மிக விரைவில் ஒரு தினத்தில் இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் எனத் தெரிய வந்தது.

மாகாண சபைத் தேர்தல்களையும் இனிமேல் உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தும் அதே முறைமையின் கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

மாகாண சபைகளைத் தொகுதி வாரியாகப் பிரித்து, தொகுதி வாரியமாக 60 வீதத்தினரையும் விகிதாசார முறைமையின் கீழ் எஞ்சிய 40 வீதத்தினரையும் தெரிவு செய்யும் ஒரு தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படும்.

இந்த முறைமையை அறிமுகம் செய்வதற்காக, மாகாணங்களைத் தொகுதிகள் வாரியாக எல்லை பிரிப்பதற்கும், அது தொடர்பான தேர்தல் சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் ஓராண்டு பிடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது காலாவதியாகும் மாகாண சபைகளின் பதவிக் காலத்தை அந்த ஓராண்டு வரை நிடிப்பதற்கு இந்த 20 ஆவது அரசமைப்பத் திருத்தம் வழி செய்யும் எனக் கூறப்பட்டது. (உ)

## கைதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைப் புறந்தள்ளியதாலேயே தமிழ் அரசியல் கைதிகள் இன்று வரை சிறைகளில் வாடுகின்றனர்’

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துக் கூறுகையில்–

தமிழ் அரசியல் கைதிகள் இதுவரை சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றமைக்கு இந்த அரசுடன் அதன் பங்காளிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக் கூறவேண்டும்.

தற்போதைய அரசு ஆட்சியமைக்க உதவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இந்த அரசை சர்வதேசத்தின் பிடியில் இருந்தும் காப்பாற்றுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் இந்த அரசுக்கு ஐ.நாவில் மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தது.

ஆனால், இப்போது கூட்டமைப்புத் தலைவர் ஐ.நாவின் தலையீட்டைக் கோருகின்றமை திட்டமிட்ட நாடகம் ஆகும். எஞ்சிய தமிழ் மக்களையும் தாரை வார்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது சதி செய்கின்றது.

தமது விடுதலையை வலியுறுத்தி அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள கைதிகளின் போராட்டத்திற்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம். அவர்கள் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதே நியாயமாகும்.

– எனக் கூறினார். (ம)

## கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் காட்டமாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அதற்குத் தாம் நேற்று எழுதிய பதில் கடிதத்திலேயே கட்சிப் பரிந்துரையை மட்டும் அடிப்படையாக வைத்து அமைச்சர்களை நியமிக்க முடியாது என்று முதலமைச்சர் கூறியிருக்கின்றார்.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:–

நாம் இருவேறு கடமைகளில் ஈடுபட்டுள்ளோம். கட்சி நலம் கருதி சிபார்சு செய்வது உங்கள் பொறுப்பு. ஆட்சி நலம் சார்ந்து நடவடிக்கை எடுப்பது முதலமைச்சர் பொறுப்பு. கட்சிகளால் நியமிக்கப்பட்டவர்கள் அல்லாது பிறரை முன்னைய அமைச்சரவையில் உள்ளடக்கியதாக நீங்களே குறிப்பிட்டுள்ளீர்கள். அது வாஸ்தவமே. அமைச்சர்களை நியமிப்பது முதலமைச்சரின் பொறுப்பு. அப்பொறுப்பானது உங்களை உள்ளடக்கிய தமிழ்த்தேசியகூட்டமைப்பின் கட்சித்தலைவர்கள் யாவராலும் அண்மையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கும்போது தகைமை, கட்சி, மாவட்டம், பால் சமநிலை, மக்கள் செல்வாக்கு, கூட்டுறவு மனப்பான்மை போன்ற பலதையும் மனதிற் கொண்டே முதலமைச்சர் அமைச்சர்களை நியமிக்கின்றார்.

வெறுமனே கட்சி அடிப்படையிலும் கட்சியின் தலைமைத்துவத்தின் விருப்பு வெறுப்புக்களுக்கும் அமைய நியமனங்கள் அமைவதில்லை. கூடிய வரையில் கட்சியின் சிபார்சுகள் சிந்தனைக்கு எடுக்கப்படுவன. கட்சிகள் எடுக்கும் தீர்மானங்கள் சிபார்சுகளே அன்றி ஒரு முதலமைச்சரைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகக் கொள்ளக் கூடாது.

ஆனால் அவ்வாறான புறக் கணிப்புக்கள் அரசியல் ரீதியாக ஒரு முதலமைச்சரை வெகுவாகப் பாதிக்கக் கூடியவை என்பதை நான் நன்றாக உணர்ந்தவன். அதற்காகக் கட்சிகளின் தலைமைத்துவம் கூறுகின்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக எனது தீர்மானங்களைப் பிறழச் செய்வதற்கு நான் தயாரில்லை.

உங்கள் கட்சியானது இருவரில் ஒருவர் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப் போவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தது. அவ்விருவரில் ஒருவரான வைத்திய கலாநிதி ஒருவேளை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் எனது பணி இலகுவாக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடைபெறாததால் எனதுதுற்துணிவுரித்தை நான் பாவிக்க வேண்டி வந்தது.

விந்தன் கனகரத்தினத்தின் மீது எனக்கு எந்தவித மனஸ்தாபமும் இல்லை. அவர் எமக்குப் பலவிதங்களிலும் வேண்டியவர். உதவி செய்தவர். எமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். ஆனால் பலவித காரணங்கள் அவரை சுகாதார அமைச்சராக நியமிக்க முடியாது என்னைத் தடுக்கின்றன. புளொட்டைச் சேர்ந்த சிவநேசன் அவர்களுக்கு ஏற்கனவே ஒரு அமைச்சர் பதவி கொடுக்கப்பட இருந்தமையை விந்தன் கனகரத்தினத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தேன். அதை அவர் ஏற்றும் இருந்தார். அதனால்தான் சுகாதார அமைச்சைக் கொண்டுநடத்தக்கூடியவல்லமை தனக்குள்ளதென அறிவித்திருந்தார்.

விந்தன் அவர்களுடன் தொடர்ந்து நல்லெண்ணத்துடன் எமது பணிகளை நடத்திச் செல்லவே நான் விரும்புகின்றேன். கட்சி அதற்குத் தடையாக இருக்காது என்று நம்புகின்றேன். மக்கள் சேவையைக் கருத்தில் வைத்து எமது தனியான விருப்பு வெறுப்புக்களைத்தியாகம்செய்து முன்னேற முன்வர வேண்டும் என்று உங்களிடமும் உங்களின் கட்சியிடமும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். – என்று உள்ளது. (உ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றமும் இல்லாததால் அவர் நேற்றுப் புதிதாகச் சத்தியப் பிரமாணம் செய்யவில்லை.

குணசீலன், சிவநேசன் ஆகியோர் புதிய அமைச்சர்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றனர்.

ஏற்கனவே அமைச்சர் பதவியை வைத்திருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும், அனந்தி சசிதரனும் புதிய பொறுப்புக்களையும் ஏற்றமையால் அவர்களும் நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

சுகாதார அமைச்சு முழுமையாக ஞா.குணசீலனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் க. சிவநேசன் விவசாயம், மீன்பிடி, விவசாய சேவைகள், கால்நடை, நீர்ப்பாசனம், நீர்வழங்கல், சுற்றுச் சூழல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் மீன்பிடி அமைச்சின் கீழ் இருந்த வர்த்தக வாணிபம் மற்றும் விவசாய அமைச்சின் கீழ் இருந்த உணவு வழங்கல் போன்ற துறைகள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனின் அமைச்சின்கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், மீன்பிடி அமைச்சிடம் இருந்த கிராமிய அபிவிருத்தி மற்றும், வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து, போக்குவரத்து உள்ளிட்ட துறைகளை முதலமைச்சர் தனது அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

மேற்படி புதிய துறைகளை தமது அமைச்சின் கீழ் பொறுப்பெடுப்பதற்காக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனும் நேற்று வடக்கு ஆளுநருக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்தனர்.

கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனின் அமைச்சில் எந்தவித மாற்றமும் செய்யப்படாததால் அவர் நேற்றுப் புதிதாகப் பதவியேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ–ம)

## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவைப் பதவி நீக்கம் செய்ய நேற்று நடவடிக்கை எடுத்தார்.

அவரை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சிலிருந்து பதவி நீக்கம் செய்யும் கடிதம் ஜனாதிபதி செயலகத்தால் அவருக்கு அனுப்பப்பட்டது.

இதேவேளை, தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற மாட்டார் என விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு மாறாக பகிரங்க விமர்சனங்களை வெளியிட்டு வந்த விஜேதாஸ ராஜபக்ஷவை அதற்காகப் பகிரங்க மன்னிப்புக் கோரும்படி அல்லது அமைச்சர் பதவியை விட்டு விலகுமாறு ஐ.தே.கட்சி கோரியிருந்தது. இரண்டையும் செய்வதற்கு அவர் மறுத்தமையை அடுத்தே அவரைப் பதவி விலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வரின் அந்தச் செயற்பாட்டுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தாம் தயாராகி வருகின்றார் என்றும் கூறியிருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பில் தமது சட்டத்தரணிகள் தயாராகி வருகின்றனர் என்றும் பெரும்பாலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இதுதொடர்பானவழக்குத்தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

“என்னைப்பதவியில் இருந்து நீக்கும் கடிதத்தை முதலமைச்சர் எனக்கு அனுப்பியிருக்கின்றார். அவரால் என்னைப் பதவி நீக்கமுடியாது. வேண்டுமானால் என்னைப் பதவி நீக்கும்படி ஆளுநருக்கு அவர் பரிந்துரை செய்யலாம். ஆளுநர் அத்தகைய பரிந்துரை குறித்து முடிவெடுப்பது வேறு விடயம்.

“முதல்வர் தமக்கு அதிகாரம் இல்லாத விடயத்தைப் பிரயோகித்து என்னைப் பதவி நீக்கிவிட்டார் என்று கருதிக் கொள்வதும் அதனால் ஏற்பட்ட தாக அவர் கருதும் வெற்றிடத்துக்கு இன்னொருவருரைப் பரிந்துரைத்து, நியமிக்கலாம் என்று அவர் எண்ணுவதும் தவறானவை.” – என்று சுட்டிக் காட்டினார் பா.டெனீஸ்வரன்.

## பொலித்தீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கமே அதற்கான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனச் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலித்தீன் பாவனைக்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பொலித்தீன் உற்பத்தியாளர்களுக்கு மாற்றீடுகளை அறிமுகம் செய்து அவர்களை அதில் ஈடுபடுத்துவதற்காகவே எதிர்வரும் ஜனவரி மாதம் வரை காலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

## குணசீலனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பதவிக்கு ரெலோ விந்தனின் பெயரை பரிந்துரை செய்திருக்க அந்த இடத்துக்கு ரெலோவின் குணசீலன் அமைச்சராகப் பதவியேற்றிருக்கின்றமை குறித்து ரெலோவின் செயலாளா நாயகம் ஸ்ரீகாந்தாவிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“இது கட்சியின் முடிவை மீறிய நடவடிக்கை.

“ முதல்வர் அழைத்தார் என்பதற்காக ஓடிச்சென்று கையேந்தி பதவியைப் பெற முடியாது. கட்சியின் தீர்மானத்தைக் கருத்தில் கொண்டுதான் செயற்பட வேண்டும்.

நிச்சயமாக இந்தச்செயற்பாடு தொடர்பில் அவருக்கு எதிராகக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும். அதனைச் செயலாளர் நாயகம் என்ற முறையில் நான் உறுதியாகக் கூறுகிறேன்.

இது தியாகிகள் குட்டிமணி தங்கத்துரை போன்ற பெருந்தலைவர்களால் உருவாக்கி வளர்க்கப்பட்ட கட்சி. இதில் அரசியல்கட்டாக்காலிகளுக்குஅறவே இடமில்லை. அதனை நான் தெளிவாகக்கூறிவைக்கவிரும்புகிறேன்.” – என் றார் ஸ்ரீகாந்தா.

## சமுர்த்தி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், பொதுமக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய சக்தியாக சமுர்த்தி திட்டம் மாறியுள்ள போதிலும், வடக்கு – கிழக்கில் அத்திட்டம் வெற்றி பெறவில்லை எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

வடக்கு – கிழக்கில் சமுர்த்தி ஊடாக பொதுமக்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கு அந்தத் துறையிலுள்ள அனைவரினதும் அறிவு, அனுபவம் மற்றும் பங்களிப்பைத் தான் எதிர்பார்க்கிறார் எனவும் ஜனாதிபதி கூறினார்.

கொழும்பு தாமரை தடாக கலையரங்கில் நேற்று நடைபெற்ற சமுர்த்தி சமூக பலம் 2017 தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்படி கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

பொருளாதார ரீதியில் பலப்படுத்த வேண்டிய அனைத்து சமூகங்களையும் பலப்படுத்தும் திட்டங்களுக்கு தற்போதைய அரசாங்கம் புதிய உயிரோட்டத்தையும், உற்சாகத்தையும் வழங்கியிருக்கின்றது. பொதுமக்களின் நன்மைக்காக சமுர்த்தி திட்டத்தை மேம்படுத்துவதற்கும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் சிறப்பான செயற்திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றோம்.

நாட்டிலுள்ள ஏழு மாவட்டங்களில் மட்டுமே சமுர்த்தி திட்டம் வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. சமுர்த்தி திட்டம் வெற்றி பெறாத வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் திட்டத்தை வெற்றி

பக்கம் 03 ≫

## யாழ்.பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பீடம் நேற்றுடன் மூடப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனின் அறிவுறுத்தலுக்கு அமையவே எதிர்வரும் செப்டெம்பர் 04 ஆம் திகதிவரை விஞ்ஞானபீடம் மூடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில், முதலாம் வருடத்தில் கல்வி பயிலும் வவுனியா மதவயின்குளம் பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய விஜயரட்ணம் வின்துசன் என்ற மாணவர் டெங்கு நோயால் மரணமாகியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கோண்டாவில் தங்குமிட விடுதியில் தங்கிக் கல்வி கற்ற மேற்படி மாணவன் மூன்று நாள்களாக டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கு உயிரிழந்தார்.

விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த மேலும் 09 மாணவர்கள் டெங்கு தொற்று காரணமாக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர். இதனால் அச்சநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்தப் பீடத்தை மூடுவதற்கு துணைவேந்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் அடிப்படையில், நேற்று மதியம் 12 மணிக்குப் பின்னர் விஞ்ஞான பீடத்திற்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

விஞ்ஞானப்பிரிவின் கல்விச் செயற்பாடுகள் மீண்டும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அதற்கிடையில், டெங்குபரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களுக்கு அறிவித்துள்ளது. (ம)

காலைக்கதிர் Kalaikkathir



# எரிவாயு உற்பத்தி தொடர்பில் விரைவில் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இலங்கை!



அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24
எரிவாயு உற்பத்தி தொடர்பில் விரைவாக சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இலங்கை உள்ளது என பெரும் நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நகர்வுகள் மற்றும் இலங்கையின் இணைந்த செயற்பாடுகளைவெளிப்படுத்தும் வகையில் அமைச்சர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கடந்த காலங்களில் சர்வதேச நாடுகள் எதிர்கொள்ளும் பொரு ளாதார நெருக்கடிகளை காரணமாக வைத்து 2040-2050 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் மின்சார மற்றும் சூரிய சக்தி வாகனங்களின் பாவனையை உருவாக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் எதிர்காலத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயுவின் பாவனை என்னவாகும் என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்துள்ளது.

இதுவரையில் பிரதான பாவனையாக எண்ணெய் மற்றும் நிலக்கரி முறைமையே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த நூறு ஆண்டுகளில் எண்ணெய், எரிவாயு, நிலக்கரி என்பன எமது இயக்கத்தை தீர்மானித்தன. அதேபோல் பிற்பட்ட காலங்களில் மின் பாவனை பெரிய அளவில் வளர்ச்சி கண்டது.

ஆரம்பத்தில் மேற்கு நாடுகளில் நிலக்கரி, நீராவியில் பயணிக்கும் வாகனங்களை விடுத்து எண்ணெய் அதிக பாவனைக்கு வந்தது. அதே காலத்தில் மின் வாகனங்களும் சாத்தியம் என்பதை தெரிவித்தனர்.

ஆரம்பத்தில் எண்ணெய் பாவனை அதிகமாக கொண்ட வாகனங்கள் பின்னர் நவீன நிறுவனங்களின் உருவாக்கத்தால் குறைந்த எண்ணெய்யில் அதிக பயணம் செய்யும் வாகனங்கள் உருவாக்கப் பட்டன. இன்று உலகில் 100 கோடி வாகனங்கள் பாவனையில் உள்ளன எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் மாற்று நகர்வுகளை இன்று சர்வதேசம் சிந்தித்து வருகின்றது.

இந்த மின்சார வாகனங்களை உருவாக்க இன்று சர்வதேச நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதேபோன்று மின்கல பாவனைகளை வாகனங்களில் அதிகம் பயன்படுத்தும் முறைமைகளைச் சிந்தித்து வருகின்றனர்.

ஆகவே, எதிர்காலத்தில் மின்சார வாகனங்களே சிறந்த தீர்வாக மாறும். இதனால் சூழல் பாதிப்பில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும். எவ்வாறு இருப்பினும் 2030 ஆம் ஆண்டுகளில் 50 வீதமான வாகனங்களை மின்சார வாகனங்களாக எம்மால் அவதானிக்க முடியும்.

அதேபோல், அடுத்த கட்ட புரட்சியாக சுயமாக பயணிக்கும் வாகனங்களை கண்டறிய முடியும். இன்று அதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் விபத்துக்கள் வெகுவாகக் குறையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த நவீன புரட்சிகளின் மூலமாக எண்ணெய், டீசல், பெற்றோல் மற்றும் நிலக்கரிக்கான கேள்வி குறையுமா எனச் சிந்திக்கப்படுகின்றது.

வாகனங்களை நவீன முறைப்படி பயன்படுத்தியபோதிலும் தொழிற்சாலைகள், ஏனைய பாவனைகள் மற்றும் மின்சாரத்தை உருவாக்கும் அடிப்படையாக நிலக்கரி மற்றும் எரிவாயுவின்தேவை அவசியம் என்பதே உண்மை யாகும். இதில் இலங்கையும் முக்கிய இடத்தில் உள்ளது. இலங்கை போன்ற நாடுகளும் இந்த முறைமைகளை உடனடியாக சிந்திக்க வேண்டும்.

இலங்கையின் வளங்களும் எமது அமைவிடமும் முக்கியமான ஒன்றாகும். மன்னார் கடல் எல்லையில் எரிவாயு உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தினால் அடுத்த 40 ஆண்டுகளுக்குத் தேவையான மின்சாரத்தை பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, உடனடியாக நாம் எரிவாயு உற்பத்தியை சிந்திக்க வேண்டும். நவீனஉற்பத்திகள் கண்டறியப்பட்ட போதிலும் நாம் இன்னும் 50 ஆண்டுகளுக்காவது எரிவாயு மற்றும் நிலக்கரி முறைமைகளைப் பாவிக்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இட மில்லை.

எனவே, நாம் எரிவாயு உற்பத்தியை அடுத்தகட்டமாக சிந்திக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல!

### சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவிப்பு



கொழும்பு, ஓக. 24
மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)' எனும் சட்ட மூலத்துக்கு எதிராக ஆற்றுப்படுத்தப்பட்ட மனு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்துக்கு அறி விக்க விரும்புகின்றேன்.

மனுதாரர் இந்தச் சட்டமூலம் தொடர்பான மனுவைத் தொடர்ந்து முன்னெடுக்க விரும்பவில்லையென நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானது அல்ல எனவும், அரசமைப்பின் 12(4) அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள சமத்துவத்துக்கான உரிமை ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றது எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்று சபாநாயகர் தெரிவித்தார்.

மாகாண சபைகளில் கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீட்டில் பெண்களுக்கு முப்பது சதவீதத்தை வழங்குவதற்கு வழிவகுக்கும் வகையிலேயே மாகாண சபைத் தேர்தலில் திருத்தம் கொண்டு வரப்பட் டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் வேட்பாளர் பட்டியலில் 30 சதவீதத்தைப் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால்வேட்புமனுவை நிராகரிக்கும் வகையிலான ஏற்பாடுகளும் இதில் இருக்கின்றன.

## ஆலய உற்சவங்கள்

மண்டைதீவு, ஓக.24
மண்டைதீவுதிருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல நவோத்திர சகஸ்ர (1008) சங்காபிசேகமும் விநாயகர் சதுர்த்தி உற்சவமும் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று மதியம் மகேஸ்வர பூசை இடம்பெறவுள்ளது. (இ)

★ ★ ★

அளவெட்டி, ஓக.24
அளவெட்டி தெற்கு நடன விநாயகர் தேவஸ்தானத்தின் ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

பண்டத்தரிப்பு, ஓக.24
வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.20 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 4 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

★ ★ ★

அரியாலை, ஓக.24
அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

## வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்பு!



வவுனியா, ஓக. 24
வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள வயற் காணியில் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள வயற் காணியில் நேற்றுமுன்தினம் மாலை பண்படுத்தும் பணியில் ஈடுபட்ட சமயம் அப்பகுதியில் வெடிக்காதநிலையில் குண்டுகள் இருக்கின்றமையை அவதானித்த உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

தமக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அந்தப் பகுதியில் 6 கைக்குண்டுகளையும், ஒரு பராலைட்டையும் மீட்டுள்ளனர். (க-100)

காலைக்கதிர் Kalaikkathir



### ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு

# வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட முருகன் ஜீவசமாதி உண்ணாவிரதம்

## உடல்நிலை சோர்வு; உறவினர் பார்க்கத் தடை



சென்னை, ஓக.24

இந்தியப்பிரதமர்ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 26 வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன் ஜீவசமாதி அடையும்நோக்கில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளநிலையில், அவரது உடல்நிலை குறித்து அச்சம்வெளியிடப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் நான்கு பேர் கடந்த 26 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

வேலூர் மத்திய சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முருகனின் விடுதலைக்காக அவரது குடும்பத்தினரும் உறவினர்களும் கடந்த 26 வருடங்களாக எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இந்நிலையில், தொடர்ந்தும் சிறையில் இருக்க முடியாது எனத் தெரிவித்த முருகன் கடந்த மாதம் ஜீவசமாதி அடையப்போகிறார் என அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் இந்தியப் பிரதமருக்கும் கடிதம் மூலம் அறிவித்திருந்தார். பிரதமர் அலுவலகத்தில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்காத நிலையில், கடந்த 4 ஆம் திகதி முதல் உணவை முற்றாக ஒறுத்து பழங்களை மட்டும் உண்டுவந்தார்.

இந்நிலையில் கடந்த 18 ஆம் திகதி சிறையில் உள்ள ஆலயத்தில் ஜீவ சமாதியை நோக்கிய உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். அத்துடன் யாருடனும் பேசாமல் இருக்கும் மௌனப் போராட்டத்தையும் தொடங்கியுள்ளார்.

நேற்று ஆறாவது நாளாக அவர் உண்ணாவிரதம் இருப்பதால் உடல் சோர்வடைந்துள்ளது. வைத்தியர்கள் அவரது உடலைப் பரிசோதித்துள்ளனர்.

அவரது உடல் நிலை குறித்து அச்சம் வெளியிட்டுள்ள உறவினர்கள் அவரைப் பார்வையிட சிறைச் சாலைக்குச் சென்ற போதிலும் சிறை நிர்வாகம் பார்ப்பதற்கு அனுமதி மறுத்துள்ளது.

இதனிடையே உண்ணாவிரதம் இருப்பது சிறை விதிகளுக்கு முரணானது எனக் கூறிய சிறை அதிகாரிகள், உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு முருகனுக்கு கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

எனினும், அவர்களின் அழுத்தங்களுக்குப் பணியாத முருகன் ஜீவசமாதி அடையும் போராட்டத்தில் உறுதியாக இருக்கின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது விடுதலைக்கான அறிகுறிகள் தென்படாத நிலையில் கடந்த சில வருடங்களாக காவி உடைக்கு மாறிய முருகன் தாடியும் சடாமுடியும் வளர்த்து ஒரு துறவியைப் போலவே காட்சியளிக்கின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(ம)




# படையினர் குற்றம் புரிந்திருந்தால் தண்டிக்கப்பட்டேயாக வேண்டும்!

## புதிய கடற்படைத் தளபதி சின்னையா திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 24

யுத்தத்தின்போது எவ்வகையான வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் சீருடையை அணிந்து கொண்டு குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் அதனை மன்னிக்கவே முடியாது என்று இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியும், அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட தமிழருமான வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

குற்றங்கள் நிரூபிக்கப்படும்வரை அனைவருமே நிரபராதிகள் என்றும் எம்மால் யாரையும் நியாயம் தீர்க்கவும் முடியாது என்றும் தெரிவித்த கடற்படைத் தளபதி, அனைத்தையும் சட்டத்தின் கையில் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இலங்கையின் 21ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் சின்னையா, நேற்று தனது முதலாவது ஊடக சந்திப்பை கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் நடத்தினார்.

இந்நிலையில் கடந்த காலங்களாக கொலை, கடத்தல் மற்றும் சித்திரவதை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட விவகாரத்தில் நீதிமன்றத்தின் உத்தரவில் முன்னாள் கடற்படைத் தளபதி உட்பட பல சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.

எனவே கடற்படைக்கு ஏற்பட்டுள்ள இப்படியான கரும்புள்ளிகள் குறித்து உங்களது நிலைப்பாடு என்ன என்பது பற்றி ஊடகவியலாளர்கள், கடற்படைத் தளபதியிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா எதுவுமே நிரூபிக்கப்படும் வரை அனைவரும் நிரபராதிகளாவர். எவரையும் நியாயம் தீர்ப்பதற்கு எம்மால் முடியாது. அதனை சட்டத்தின் கையில் ஒப்புவிக்க வேண்டும். ஒரு கடற்படைத் தளபதியாக இதனைக் கூறுகின்றேன்.

“எமக்கு ஒரு நீதிமன்றம் இருக்கிறது. அதேபோல கடற்படைச் சட்டமும் காணப்படுகிறது. அந்த வகையில் ஏதாவதொரு குற்றச்சாட்டில் சிக்கியிருந்து, அது சிவில் அல்லது கடற்படை மன்றில் நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

“சீருடையில் ஏதாவது குற்றங்களை செய்திருந்தாலும் நிச்சயம் தண்டனை வழங்கப்பட வேண்டும். இராணுத் தளபதி அண்மையில் இப்படியொரு விடயத்தைக் கூறியிருந்தார்.

“இராணுவ சிப்பாய் ஒருவர் கொலைகாரராக முடியாது. அதேபோல கொலைகாரர்கள் இராணுவ வீரர்களாக இருக்க முடியாது. நானும் அதற்கு உடன்படுகிறேன்.

“நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் அல்லது குற்றத்தை நீங்கள் செய்திருந்தால் அதற்கு மன்னிப்பே கிடையாது.

“நீங்கள் போரில் எவ்வளவு பெரிய காரியங்களை நிகழ்த்தியிருந்தாலும் - பெரிய ஹீரோவாக விளங்கியிருந்தாலும் - அது கணக்கில் எடுக்கப்படாது.

“இந்தச் சீருடை எந்தக் கொலைக்கோ அல்லது குற்றங்களுக்கோ அனுமதிக்காது. அதேபோல சித்திரவதைகளை செய்யவும் அனுமதிக்காது. இந்த விடயத்தில் இதுவே எனது நிலைப்பாடாகும்” - என்று தெரிவித்தார்.

இதேவேளை கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையா அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் உறுப்பினர் என்றும், அவரால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ அண்மையில் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கடற்படைத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள் வினவினர்.

“அமெரிக்க முகவராக நியமிக்கப்பட்டால் அது எமது நாட்டிற்கே நன்மையாகும். அப்படி நியமிக்கப்பட்டால் அதிகமான வேலைகளை செய்துகொள்ள முடியும்.

“அமெரிக்க முகவராக்கினால் அடுத்த பக்கம் அவரை மாற்றுவதற்கு முடியும் என்று இலங்கையர்கள் நினைத்தால் அவ்வாறு முடியாது என்று நான் நினைக்கின்றேன். நாங்கள் நாட்டிற்காக 35 வருடங்கள் யுத்தம் செய்தவர்கள். எங்களை, அவ்வளவு சுலபமாக மாற்றுவதற்கு முடியாது - நான் அமெரிக்க பசுபிக் கமாண்டராகப் பணிபுரிந்தபோது அங்கிருந்து பயிற்சி, பொருள்கள், கண்ணிவெடி மீட்பு, மீள்குடியேற்றம் என்பவற்றைக் கற்றுவந்து எமது படையினரை விருத்தி செய்வதற்கே முயற்சித்தேன்.

“மீண்டும் சிறிலங்காவுக்கு வராமல் அங்கிருந்தே பணிசெய்திருக்கலாம். ஆனால் அங்கு சென்றாலும் எமது படை, நாட்டின் அபிவிருத்தியையே நான் செய்தேன். இதுகுறித்து பலர் பலவிதமாகவும் சித்திரிக்கலாம். ஆனால் அதில் உண்மையிருக்காது” - என்றார்.

# மக்களின் தேவைகளை இயன்றவரை பூர்த்தி செய்வாராம் புதிய அமைச்சர்

## பதவியேற்றபின் சிவநேசன் நேற்றுத் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஓர் அமைச்சர் வேண்டுமென்ற அடிப்படையில் விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற அமைச்சுப் பொறுப்புக்கள் எனக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண முதலமைச்சரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செயலாற்றுகின்றமையுடன், மக்களின் தேவைகளையும் என்னால் இயன்றவரை நான் பூர்த்தி செய்வேன் எனப் புதிதாகப் பதவியேற்றுள்ள வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த க.சிவநேசன் வடமாகாண விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே முன்னிலையில் நேற்று பிற்பகல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு பதவியேற்றார்.

புதிய அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“வடமாகாணசபையின் ஆயுள்காலம் நிறைவுறுவதற்கு மிகக் குறுகிய காலமே உள்ளது. அந்தக் குறுகிய காலத்திற்குள் என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதனை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்” என்றார் அவர்.

### கைதி சடலமாக மீட்பு

# கைதான 5 பொலிஸாருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சந்தேக நபர்களை எதிர்வரும் நான்காம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஐந்து இளைஞர்களை சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அதில் சிறிஸ்கந்தராஜா சுமணன் என்ற இளைஞர் உயிரிழந்த நிலையில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உரும்பிராயில் முன்னிரவில் இளைஞன் மீது வாள்வெட்டு

உரும்பிராய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இளைஞர் ஒருவரை கூறிய ஆயுதத்தால் வெட்டித் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இளைஞர் யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள முடி வெட்டும் நிலையத்தில் சேவை செய்யும் 24 வயதுடைய சுரேஸ்வரன் கனிஸ்டன் என்ற இளைஞரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். படுகாயமடைந்த இந்த இளைஞனின் முதுகுப் பக்கத்தில் 10 தையல் போடப்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.